
விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii




பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 01 வெள்ளிக்கிழமை (14.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 086

## மறுசீரமைக்கப்பட்ட மின் கட்டணம் நாளை முதல் அமுல்படுத்தப்படுகிறது

(கொழும்பு)

மறுசீரமைக்கப்பட்ட புதிய மின்கட்டணம் நாளை முதல் அமுலுக்கு வரும் என சக்தி வள அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று மாலை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது, இலங்கை மின்சார சபையின் நட்டங்களை ஈடு செய்யும் வகையில் ஜனாதிபதியின் அனுமதியுடன் தயாரிக்கப்பட்ட கட்டண மறுசீரமைப்புக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இது நாளை முதல் அமுலுக்கு வருகின்றது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்கால உதவிகள் குறித்து ஆராய ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை

(கொழும்பு)

ஏற்றுமதி சலுகையுடன் கூடிய இலங்கைக்கான உதவிகளை மேலும் வழங்குவது குறித்து ஆராய்வதற்கும் அது குறித்த சிபார்சுகளை மேற்கொள்வதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் விசேட குழுவொன்றினை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

கடந்த வாரம் இலங்கையை வந்தடைந்திருக்கும் அலெக்சாண்டர் புளோகஸ் தலைமையிலான மூவர் அடங்கிய இந்தக் குழு தொடர்ந்து ஒரு மாத காலம் இலங்கையில் தங்கியிருந்து நிலைமைகளை மதிப்பீடு செய்யவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இலங்கையின் தற்போதைய நிலைமைகளைத் தாம் மதிப்பீடு செய்து வருவதாகவும் தமது அறிக்கையைக் கவனத்தில் கொண்டே எதிர்காலத்தில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு உதவிகளை (10 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கிற்கு அதிகாரம் வழங்கப்பட்டால் மக்களை இணைத்துப் போராடுவோம்

## ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

13-வது திருத்தச்சட்ட மூலத்திற்கு அமைய வடக்கு மாகாண சபைக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அதற்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி வீதியில் இறங்கிப் போராடப் போவதாக ஜே.வி.பி. எச்சரித்துள்ளது. கிழக்கைப் போன்று வடக்கிலும் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் ஜே.வி.பி. கோரியுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்வதற்கு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு

(கொழும்பு)

கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் மிக விரைவில் நடைபெறும். இத் தேர்தலில் விடுதலைப்புலிகள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி தவிர்ந்த மற்றும் அனைத்துக் கட்சிகளுடனும் கூட்டுச்சேர அரசாங்கம் தயாராகவிருப்பதாக விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது, கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடவடிக்கைகளைக் கையாள்வதற்கு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் தலைமையில் விசேட குழு ஒன்றை சிறிலங்கா (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கை மீது கடும் விமர்சனங்கள்

(கொழும்பு)

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் 7-வது கூட்டத் தொடரில் இலங்கை மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது. அரசு போர் நிறுத்தத்தை தன்னிச்சையாக முறித்துக் கொண்டாலும் எல்லாத் தரப்பினரும் அனைத்துலக மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விதிகளை மதிக்க வேண்டும் என்று கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத் தொடரில் பேசிய மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் தெரிவித்துள்ளார்.

அனைத்துலகக் கண்காணிப்பாளர்களை இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும் என்று அவரைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஸ்லோவேனியா (ஐரோப்பிய ஒன்றியம் சார்பாக) பிரான்ஸ்,சுவிஸ்லாந்து ஆகிய நாடுகள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமை மீறல்களை பெருமளவான தொண்டர் அமைப்புகளும் விமர்சனம் செய்து வருகின்றன. இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல் போதல் துன்புறுத்தல்கள் தொடர்பான ஐ.நாவின் சிறப்புப் பிரதி நிதியும் கடந்த 10 ஆம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

யூரோவின் பெறுமதிக்கு எதிராக அமெரிக்க டொலரின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சி கண்டிருக்கின்றது. இதன் காரணமாக உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலையும் பாரியளவு அதிகரிப்பைக் கண்டிருக்கின்றது.

யூரோவின் பெறுமதிக்கு எதிராக அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 1.556 டொலர்களாக நேற்று வீழ்ச்சியடைந்துள்ளதை யடுத்து உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்றுக்கு 110 டொலர்களிலும் பார்க்க அதிகரித்திருக்கின்றது.

1999 இல் யூரோ அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.தேர்தல் குறித்த அரசின் கூற்று சர்வதேசத்தை ஏமாற்றும் முயற்சி

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் உள்ளூராட்சித் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெற்றது என்ற அரசாங்கத்தின் கூற்று நாட்டு மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் முயற்சியாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதி நாடாளுமன்றக் குழுவின் தலைவர் மாவை.சேனாதிராஜா விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த மார்ச் 10 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெற்றது என்றும் ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றி என்றும் (10 ஆம் பக்கம் பார்க்க)



சிங்கத்தின் வாயில் சிக்கிய ஆசிரியை ஒருவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

இச் சம்பவம் ஆபிரிக்க நாடான ஜிம்பாவேயில் இடம்பெற்றது.

சிங்கத்தின் வாயில் சிக்கித் தவிக்கும் ஆசிரியையைப் படத்தில் காணலாம்.

(விரிவான செய்தி 06 ஆம் பக்கத்தில்)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# திருநெல்வேலி பொதுச் சந்தை நவம்பருக்குள் நவீனமயப்படுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பொதுச்சந்தை எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் அனைத்து வசதிகளுடன் கூடிய சந்தையாக மாற்றியமைக்கப்படுமென யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

வடபிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வருமானம் கூடிய பிரதேச சபையாக நல்லூர் பிரதேச சபை இருந்தபோது அங்கு நிர்வாகச் சிக்கல் நிலையால் வளங்களை உரியவாறு மேம்படுத்தமுடியவில்லை.

எனினும் தற்போது அப்பிரதேச சபைக்கு புதிய செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் இனிவரும் காலப் பகுதியில் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பல்வேறு வளங்கள் உரியவாறு திட்டமிட்டு அபிவிருத்தி செய்யப்படும்.

இதன் ஓர் கட்டமாக திருநெல்வேலி சந்தை சகல வசதிகளுடன் கூடிய சந்தையாக மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் பூர்த்தி செய்யப்படும் என வடபிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இக்கருத்துக்களை தெரிவிக்கும்போது வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்ஸன் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# இந்திய வெளியுறவுச் செயலாளருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையின் பிரதிநிதியாக உலக சிறுபான்மை இனத்தவர்களின் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக புதுடில்லி சென்றிருந்த ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் இந்திய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுடனும் பல்வேறு அரசியல் தலைவர்களுடனும் கலந்துரையாடியுள்ளதுடன் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பில் அவர்களது பங்களிப்புக்களையும் கோரியுள்ளதாக அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மேற்படி விஜயத்தின் போது இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனனை சந்தித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையில் இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் சமத்துவத்தை முன்னெடுப்பதற்கும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையில் நல்லெண்ணத்தை வளர்த்துக் கொள்வதற்கும் அதேநேரம் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இந்தியாவின் பங்களிப்பைக் கோரியுள்ளதாகவும் நீண்ட நேரம் இடம்பெற்றுள்ள இக் கலந்துரையாடலின்போது கருத்துத் தெரிவித்துள்ள சிவசங்கர் மேனன்,

13-வது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தினை செயற்படுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருவதையிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும் என்றும் இலங்கையில் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் அமைதி மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் இந்தியா தனது பங்களிப்புக்களை வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## விற்பனைக்கு

வீட்டுக் காவலுக்குரிய இரண்டரை வயது நிரம்பிய டோமன் ஆண் நாய் விற்பனைக்குண்டு.

ஸ்ரீராஜ்,
சம்பந்தர் வீதி,
வட்டுக்கோட்டை.
T.P.021 4591358

(C-857)

# கப்பல் பயணிகளுக்கான பஸ்கட்டணம் குறைப்பு

(யாழ்ப்பாணம்)

கப்பலில் பிரயாணம் மேற்கொள்ளும் பயணிகள் யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பழை வரை செல்வதற்கான பஸ் கட்டணம் இன்று முதல் ரூபா 75 ஆகக் குறைக்கப்பட்டுள்ளதாக யாழ். சிவில் அலுவலக ஒருங்கிணைப்பாளர் மேஜர் அநுர தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் இதற்கான கட்டணமாக ரூபா 100/-அறவிடப்பட்டது.

இதனைக் குறைக்குமாறு பொதுமக்களும் சிவில் அமைப்புகளும் விடுத்த கோரிக்கைகளை அடுத்து சிவில் அலுவலகமும் அரச அதிபரும் மேற்கொண்ட நடவடிக் கையை அடுத்து யாழ். சிவில் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்து ரையாடலிலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் சிவில் அலுவலக அதிகாரிகளும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.கமலநாதன், பிரதிப் பொதுமுகாமையாளர் (வடக்கு) க.கணேசபிள்ளை மற்றும் மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான நிவாரண விநியோகம்

யாழ். மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான 2008ஜனவரி , பெப்ரவரி,மார்ச் மாதங்களுக்கான இலவச உலருணவு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ப.நோ.கூ.சங்கங்கள் மேற்படி விநியோகத் திற்கான வழங்கற்கட்டளைகளை 15 ஆம் திகதி (சனிக்கிழமை) மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் பெற்று பொருட்களை களஞ்சியங்களில் இருந்து உடனடியாகப் பெற்று விநியோக நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபர் அறியத்தந்துள்ளார். (அ)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடாத்தும் க.பொ.த உயர்தர (2007) '3A' சித்தி பெற்ற மாணவர்களுக்கான

## கௌரவிப்பு அழைப்பிதழ்

இடம்:- யாழ்.செயலக மாநாட்டு மண்டபம்

காலம்:- 15.03.2008 சனிக்கிழமை காலை 08.30 மணி

வரவேற்புரை:- 8.45 மு.ப திரு.ந.சிவரத்தினம் (செயற்பாட்டு முகாமையாளர்)

ஆசியுரை:- 8.55 மு.ப திரு.கே.கணேஷ் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

தலைமை உரை:- 9.05 மு.ப திரு.பொ.அ.அருமைநாயகம் (உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி வடபிராந்தியம்)

சிறப்புரை:- 9.15 மு.ப பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை

கருத்துரைகள்:- 9.30 மு.ப திரு.வி.ரி.செல்வரத்தினம் (யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் யாழ்.கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்)

9.40 மு.ப திரு.என்.விஜயசுந்தரம் (வலம்புரி)

பிரதம உரை:- 9.50 மு.ப. திரு.ஆர்.ஏ.திலகரட்ணம் (அதிபர், உயர் தொழில் நுட்ப நிறுவனம் திருநெல்வேலி)

9.55 மு.ப திரு.கே.பாலசுப்பிரமணியம் (முன்னாள் உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி யாழ்ப்பாணம்)

விரிவுரை நிகழ்ச்சி:- 10.00 மு.ப 'Career Development' திரு.எம்.சின்னத்தம்பி (சிரேஷ்ட விரிவுரையாளர், யா/பல்கலைக்கழகம்)

10.30 மு.ப 'Internet & Email' திரு.எஸ்.ஹரிஹரகணபதி (விரிவுரையாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம்)

12.30 பி.ப சான்றிதழ் மற்றும் அடையாளப் பரிசு வழங்கல்

1.00 பி.ப நன்றியுரை திரு.கே.எல்.லட்சுமணசர்மா

மதியபோசனம்

*3A சித்தி பெற்ற மாணவர்களையும் மாணவர்கள் சார் அதிபர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்*

# மின்சாரக் கட்டண உயர்வுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

மின்சாரக் கட்டணங்கள் உயர்த்தப்பட வேண்டும் என்ற முன்மொழிவுக்கு அமைச் சரவை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங் கியுள்ளது.

90 அலகுகள் வரை கட்டண உயர்வு இல்லை என்றும் அதற்கு மேற்பட்ட அலகு களுக்கு 20 முதல் 25 சதவீத கட்டண உயர்வு ஏற்படும் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மின்பாவனையாளர்கள் பாவனையைக் குறைப்பதை ஊக்குவிக்கு முகமாகவே 90 அலகு வரை மின் கட்டணம் அதிகரிக்கப்படவில்லையென்றும் தெரிவிக் கப்படுகின்றது.

அத்துடன், மின்சாரசபை 90 அலகுகளுக்கு கூடுதலாக பாவிக்கும் பாவனையா ளர்களுக்கு 30சதவீதம் எரிபொருள் கட்ட ணம் சேர்த்துக் கொள்ள உள்ளதாகத் தீர்மா னித்துள்ளது. இலங்கை மின்சாரசபை எதிர்நோக்கும் பாரிய 43 மில்லியன் ரூபா நஷ்டத்தை குறைக்கும் நோக்கிலேயே இம் மாற்றிய மைப்பு ஏற்படுத்தப்படுகிறது. (அ-5)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை இராமநாதன் நுண்கலைக் கழகம்

## நுண்கலைமாணி (சங்கீதம்/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2007/2008

## அனுமதிப்பரீட்சை (ஆற்றுகை/நேர்முகப்பரீட்சைகள்)

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதிப்பரீட்சைகள் (ஆற்றுகை/நேர்முகப்பரீட்சைகள்) யாழ்ப்பாண மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு யாழ்.பல்கலைக்கழகத்திலும். ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு வவுனியா வளாகத்திலும் கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன. அனுமதிப்பரீட்சைக்கு தகுதியானவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0212226714 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

| கற்கை நெறி | யாழ்.பல்கலைக்கழகத்தில் பரீட்சை நடைபெறும் திகதி | வவுனியாவளாகத்தில் பரீட்சை நடைபெறும் திகதி | நேரம் |
|---|---|---|---|
| இசை | 17.03.2008.18.03.2008 19.03.2008 | 24.03.2008 | மு.ப9.00-பி.ப3.00 |
| நடனம் | 17.03.2008.18.03.2008 | 24.03.2008 | மு.ப9.00-பி.ப3.00 |
| சித்திரமும் வடிவமைப்பும் | 24.03.2008 | 24.03.2008 | மு.ப9.00-பி.ப3.00 |

பதிவாளர்,
13.3.2008

(856)

# இன்று ஒரு தகவல்

## நம்பிக்கை

காசியிலே எழுந்தருளி இருப்பவர் காசி விஸ்வநாதர். தேவி காசி விசாலாட்சி இவர்கள் இரண்டுபேரும் ஒரு நாள் பேசிக்கொண்டிருக்கும் போது விஸ்வநாதர் சொன்னார் ''இந்த மனிதர்களை நாங்கள் மிகவும் நம்பிக்கை யோடு தான் படைத்திருக்கிறோம். ஆனால் அவர்களுக்குத் தான் நம்பிக்கை இல்லை... எதிலும் ஓர் உண்மையான நம்பிக்கையில்லாமலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்'' என்றார்.

''என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? அதோ பாருங்கள்... எவ்வளவு பேர் காசிக்கு வந்து கங்கையிலே குளித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்பிக்கை இல்லாவிட்டால் அவர்கள் இவ்வளவு தூரம் கங்கையைத் தேடி வருவார்களா?'' என்றார் தேவி. சிறிது நேர விவாதத்தின் பின் அதைச் சோதனை செய்து பார்க்கலாம் என்று இருவரும் முடிவு செய்தார்கள். நாம் இருவரும் பக்தர்கள் மாதிரி உருவத்தை மாற்றிக் கொண்டு கங்கைக் கரைக்குப் போவது என்றும் விசுவநாதர் கங்கையிலே இறங்கிக் குளிக்கும் போது சுழலிலே சிக்கிக் கொண்டது போல நடிப்பது என்றும் கரையிலே நிற்கும் தேவி உரத்து என்னுடைய வீட்டுக்காரரை யாராவது காப்பாற்றுங்களே என்று சத்தம் போடுவதென்றும்... யாராவது ஒரு புண்ணியாத்மா அவரது முடியில் பிடித்துத் தூக்க வேண்டும். மற்றவர்கள் போனால் அவரைக் காப்பாற்ற முடியாது... இப்படிஒருசாபம்இருக்கிறது... யாராவது ஒருபுண்ணியாத்மாவால் தான் காப்பாற்ற முடியும் என்றும் சத்தம் போடுவதென்றும் அப்போது என்ன நடக்கிறது என்பதை அறியலாம் என்றும் திட்டமிட்டனர்.

இத்திட்டத்தின்படி அவர்கள் சாதாரண பக்தர்கள் போல் உருமாறி கங்கைக்கரைக்கு வந்தார்கள். அவர் கங்கையில் இறங்கிக் குளிக்கும்போது திட்டமிட்டமாதிரி சுழியிலே சிக்கிக்கொண்டது போல தத்தளித்தார். கரையில் இருந்த அந்த அம்மா ''ஐயோ! என் கணவர் சுழியிலே சிக்கிக் கொண்டாரே... என் கணவரைக் காப்பாற்றுங்கள்'' என்று கூச்சலிட்டார். பலர் ஓடிவந்தார்கள். ''பாவம் இல்லாத ஒருவராலேதான் என் கணவர் காப்பாற்றப்பட வேண்டுமென்று சாபம் ஒன்று இருக்கிறது. அப்படியாராவது இருந்தால் அவர் கிட்டப் போய் அவரது முடியைப் பிடித்தால் காப்பாற்றலாம்.. வாருங்கள்... வாருங்கள்'' என்று கூச்சலிட்டார். அவர் இப்படிக் கூறியதும் கங்கையில் மூழ்கி அவரைக் காப்பாற்ற ஓடிவந்த அத்தனை பேரும் திகைத்துப்போய் நின்று விட்டார்கள்... அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் செய்த பாவங்கள் ஒவ்வொன்றாக ஞாபகத்துக்குவர ஆரம்பித்தன... எங்களால் அவரைக் காப்பாற்ற முடியாது என நினைத்து ஒதுங்கிப் போக ஆரம்பித்தார்கள்.

அந்தச் சமயத்தில் யாரோ ஒருவர் வேகமாக ஓடிவந்தார். கங்கையில் குதித்தார். சுழியிலே சிக்கிக்கொண்டவர் அருகில் போனார். அவர் முடியைப் பிடித்துத் தூக்கி கரைக்குக் கொண்டுவந்தார். அவ்வாறு காப்பாற்றிய வரை இவர்கள் இரண்டு பேரும் கூப்பிட்டு விசாரித்தார்கள். ''நீ யாரப்பா?'' என்று கேட்கிறார்கள். ''நான் இந்த ஊர் அன்ன சத்திரத்தில் வேலை செய்யும் சமையற்காரன்'' என்கிறார் அவர். ''நீ கங்கையிலே குளிப்பதுண்டா?'' என்று கேட்டார்கள். நான் இந்த ஊரிலே இருந்தாலும் தினமும் கங்கையில் குளிப்பதில்லை. எப்போவதாவது ஒரு நாள் குளிப்பேன் என்கிறார் அவர். கங்கையிலே ஒழுங்காக குளிக்காத நீ, உன்னைப் புண்ணியாத்மாவாக நினைத்து என்னைக் காப்பாற்ற வந்தாயே எப்படி? என்று கேட்டார்கள்.

அதற்கு அவன் சொல்கிறான் கங்கையிலே மூழ்கித் தானே உன்னைக் காப்பாற்ற வேண்டும். அதற்காக கங்கையில் குதித்ததுமே என்னுடைய பாவங்கள் எல்லாம் போயிருக்குமே! நான் புண்ணியாத்மாவாக ஆகியிருப்பேனே... அதனாலேதான் துணிந்து கங்கையில் குதித்து உங்களைக் காப்பாற்றினேன்... என்கிறான். இறைவனும் தேவியும் அவனுக்குக் காட்சியளித்து ஆசீர்வதித்தார்களாம்.

ஸ்ரீராமனந்தேத்திர சரஸ்வதி சுவாமிகள் இதைச் சொல்லியிருக்கிறார். கங்கையிலே குளிப்பவர்களுக்கெல்லாம் தங்களுடைய பாவங்கள் தொலைந்து போகுமென்ற நம்பிக்கை துளியும் இல்லை. குளிக்காத ஒருவனுக்கு அந்த நம்பிக்கை இருந்தது. அதனாலே அவனுக்குக் கடவுளைப் பார்க்க முடிந்தது. கடவுளை நாங்களும் பார்க்க முடியுமா? முடியாதா என்கிற குழப்பமெல்லாம் நமக்கு வேண்டாம். நம்பிக்கையோடு வாழவேண்டும் என்ற உண்மையை மட்டும் இந்தக் கதையிலிருந்து புரிந்து கொண்டால் போதும்.

இந்தக் கதையைக்கேட்ட நண்பர் ஒருவர் குதர்க்கமாக என்னிடம் ஒரு கேள்வி கேட்டார்- ஏன்சார்... கங்கையிலே குளித்தால் பாவமெல்லாம் போய்விடும் என்று சொல்கிறீர்களே... எனக்கு வேண்டாத ஒருவனை அழைத்துப்போய் கங்கையில் தள்ளியபின் நானும் கங்கையில் குளித்து என் பாவங்களையெல்லாம் போக்கிவிட்டு வருகிறேன். அப்பொழுது என்னைப் புண்ணியாத்மா என்று ஒத்துக் கொள்வீர்களா? என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இவ்வாண்டின் 'கமநெகும' திட்டம் தேசிய ரீதியில் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

இவ்வாண்டுக்கான 'கம நெகும' கிராம அபிவிருத்தி வேலைத்திட்டம் இன்று தேசிய ரீதியில்உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க தெரிவித்தார். 2008ஆம் ஆண்டுக்கான 'கம நெகும' வேலைத் திட்டம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் புதன்கிழமை மாலை நடை பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் மேலும் கூறியதாவது,

கிராமத்தின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்தைச் சக்தி பெறச்செய்யும் 'கம நெகும' திட்டம் மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள சகல மக்களும் தமது அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்ளச் செய்வது இத்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

2006ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் இந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பல்வேறு கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களுடன் சேர்த்து 2008முதல் 2010ஆம் ஆண்டு வரையிலுள்ள மூன்று வருட காலப் பகுதியில் இணைந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

2008ஆம் ஆண்டின் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்காக நாடு ஆறு நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள ஒவ்வொரு பிரிவினதும் நிர்வாகத்துக்கு அமைச்சர் ஒருவர், மேலதிக செயலாளர் ஒருவர் உட்பட செயற்குழு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2008ஆம் ஆண்டுக்கான 'கம நெகும' வேலைத் திட்டத்திற்கென 14400 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒவ் வொரு பிரிவுக்கும் ஏற்ப பங்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தவிர்ந்த இதனுடன் தொடர்புபட்ட பல்வேறு அமைச்சுக்களின் நிதியைப் பயன்படுத்தியும் கிராமங்களின் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலுமுள்ள அனைத்துக் கிராமங்களும் இந்தத் திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. தற்பொழுது மனித நேய இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் மன்னார் பிரதேசத்திலும் இந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களிலும் இன்று முதல் இப் பணிகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-5)

# மகாநாமவின் விசாரணை அறிக்கை

## மனோ கணேசன் விசனம்

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் காணாமல் போதல்கள் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட தனி நபர் விசாரணை ஆணையின் அறிக்கை உண்மையை ஆராய்ந்து வெளியிடப்பட்ட அறிக்கை அல்லவென மக்கள் கண்காணிப்புக்குழுவின் அமைப்பாளர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி மகாநாம திலகரட்னவால் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் காணாமல் போனவர்கள் என அறிவிக்கப்பட்ட அனைவரும் தமது வீடுகளுக்கு திரும்பிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் காணாமல் போனவர்கள் வீடு திரும்பிய சம்பவங்கள் குறித்த ஆதாரங்கள் எவையும் அந்த அறிக்கையில் இல்லை என்று மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.



விசாரணை என்ற போர்வையில் எழுந்தமானமாக அறிக்கை ஒன்றை தயாரித்து அதனை வெளியிடுவதன் மூலம் அனைத்துலகையும் நாட்டு மக்களையும் ஏமாற்ற முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

மகாநாம திலகரட்னவின் அறிக்கையில் காணாமல் போனதாக கருதப்படுபவர்கள் தமது தனிப்பட்ட பிரச்சினைகள், சமூக சிக்கல்கள் காரணமாகவே வீட்டை விட்டு வெளியேறி தலைமறைவாக உள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டியதில்லை என்றும் ஆட்கடத்தல் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் குறித்தே விசாரணை நடத்தப்படவேண்டியுள்ளதாகவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# இராசிபலன்

14.03.2008
(பங்குனி 01, வெள்ளிக்கிழமை)
ரோகினி காலை 07.50 மணிவரை
ஸப்தமி முற்பகல் 08.58 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 6.20
இராகுகாலம் 10.51-12.21 மணிவரை
சுபநேரம்-06.21-07.51 மணிவரை
காரடையா நோன்பு

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய நன்மை, கூட்டுமுயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிகசெலவு, ரோகநிலை, திடீர்நன்மை. |
| கடகம | மாதர் நட்பு, வெகுமானம், நல்ல முயற்சி, தெய்வசிந்தை. |
| சிங்கம் | உஷ்ணநிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், தனதானிய சேர்க்கை, ஆனந்தம். |
| துலாம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல், காரியசித்தி. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், புத்திரரால் கவலை, பிரயாணம், பணவிரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரிய தடங்கல், தர்மம், போசனசுகம். |
| மகரம் | நல்லமுயற்சி, தனலாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | காரிய அனுகூலம், போசன சுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்ந்தநிலை, முயற்சி தாமதம், தனவிரயம், போசனசுகம். |

வளவன்

# வடக்கில் இராணுவத்தினரால் இலவச மருத்துவ முகாம்

வடக்கில் வாழும் வறிய தமிழ்க் குடும்பங்களின் நன்மைகருதி இலவச வைத்திய முகாம் ஒன்றை கடந்த 9ஆம் திகதி இராணுவத்தினர் நடத்தினர். இதற்கான ஏற்பாடுகளை வடக்கின் கட்டளைத்தளபதி ஜீ.ஏ.சந்திர சிறி மேற்கொண்டார்.



விடத்தல்பளை, தவசிக்குளம், பாலாவி, உசன் உட்பட மற்றும் பல பிரதேசங்களில் இந்த வைத்திய முகாம் நடைபெற்றதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இராணுவத்தினரின் இந்த மனிதாபிமான நடவடிக்கைக்கு அப்பிரதேசங்களில் உள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்கள், மீனவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் கிராமசேவை அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கினர்.

மூன்று இராணுவ வைத்தியர்கள் சுமார் 500க்கும் மேற்பட்ட பல்வேறு நோயாளர்களுக்கு இங்கு மருத்துவ உதவிகளை வழங்கினர். நோயாளர்களுக்குத் தேவையான மருந்து வகைகள், உணவு மற்றும் குளிர்பானங்கள் என்பனவும் இங்கு வழங்கப்பட்டன.

தமது நோய்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்ள போதிய நிதி வசதி யற்ற ஏழை மக்களே இந்த வைத்திய முகாம் மூலம் நன்மையடைந்துள்ளனர்.

போஷாக்கு உணவுப் பற்றாக் குறை காரணமாக இப்பிரதேசங்களில் வாழும் சிறுவர்களுக்கு தோல் வியாதிகள் ஏற்பட்டிருந்ததாகவும் அவர்களுக்கு உரியகால நோய்த் தடுப்பு மருந்துகள் ஏற்றப்பட்டிருக்கவில்லை என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிறுவர்களுக்கும் இந்த வைத்திய முகாமில் உரிய சிகிச்சை வழங்கப்பட்டதாகவும் இப்பிரதேச தமிழ் மக்கள் இராணுவத்தினரின் மனித நேய நடவடிக்கைகளைப் பெரிதும் பாராட்டியதாகவும் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-5)

# காலபோகத்துக்கு 18 வகை நெல் இனங்களை யாழ். விவசாயத் திணைக்களம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் விவசாயத் திணைக் களத்தின் வழிப்படுத்தலின் கீழ் 18 வகை யான நெல் இனங்கள் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன.

இதிலிருந்து இவ்வாண்டுக் கால போக நெற் பயிர்ச் செய்கைக்கு 14 புதிய நெல் லினங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. ஏனைய 4 நெல்லினங்களும் பழைய ரகத்தைச் சேர்ந்தவையாகும்.

யாழ்.மாவட்டத்தில் விதை நெல்லுக்கு ஏற்பட்டு வரும் தட்டுப்பாட்டையும் விதை நெல் விலை அதிகரிப்பையும் தவிர்த்து விவசாயி களுக்கு தரமான விதை நெல் கிடைப்பதற் காகவே யாழ்.மாவட்ட விவசாயத் திணைக் களத்தினால் இவ்வேற்பாடு செய்யப்பட்டுள் ளது.

விதை நெல் உற்பத்திக்கான "விதை நெல் பயிர்ச் செய்கை" மூலம் மூன்று மாத நெல் இனங்களான ஏ.ரி. -303, ஏ ரி-307, பி. டபிள்யூ03-1063 ஆகியனவும் $3\frac{1}{2}$ மாத நெல் இனங்களான சி.டபிள்யூ-361, ஏ.ரி.-353, ஏ ரி 370, ஏ ரி-6683, எல் டி: 04-2236, பி.ஜி-357, பாஸ்மதி ஆகியனவும் நான்கு மாத நெல்லினங்களான பி.ஜி.-406, ஏ ரி-507, ஏரி-401, ஏ ரி-402 ஆகியன வும் ஒப்பீட்டு இனங்களான முருங்கன், பச்சைப் பெருமாள், மொட்டைக் கறுப்பன், எச்- 4 அகிய விதை நெல் இனங்களும் தற்போது செய்கை பண்ணப்பட்டுள்ளன.

3முதல் $3\frac{1}{2}$ மாத நெல்லினங்கள் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 22 விவசாயிகள் ஊடாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இதற்க மைய ஒவ்வொரு விவசாயியும் 2 ஏக்கர் வீதம் செய்கை பண்ணுவதற்கு ஊக்கு விப்பு உதவிகள் வழங்கி செய்கை பண் ணப்பட்டு தரமான விளைச்சலும் கிடைத்துள் ளது.

விதை நெல்லுக்கென தெரிவு செய்யப் பட்டு இனக்கலப்பு ஏற்படாத விதத்தில் செய் கை பண்ணப்பட்ட விதை நெல்லை விற்பனை செய்வதற்கு நியாய விலையும் தீர்மானம் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் விதை நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் விதை நெல் உற் பத்தியாளர் சங்கம் ஒன்றை உருவாக்கி சங்கத் தின் மூலம் விதை நெல் உற்பத்தியில் ஈடுபட வுள்ள விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு வழங் குவதற்கும் விவசாயத் திணைக்களம் நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது.




விதை நெல் உற்பத்தி நடவடிக்கை தொடர் பாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவகுமார் கருத்துத் தெரி விக்கையில்,

'விதை நெல் உற்பத்தி என்ற வகையில் இந்த வருடம் உற்பத்தி செய்த நவீன ரக நெல் யாழ்.மாவட்டத்தின் விதை நெல் தேவையில் 25 வீதத்தை நிறைவு செய்யும், விதை நெல் லை உணவு தேவைக்கு பயன்படுத்தாமல் 2008 ஆம் ஆண்டு காலபோக நெற்செய் கைக்கு பயன்படுத்துவதற்கு ஏதுவாக நெல் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மட்டும் விற்பனை செய்யுமாறு விதை நெல் உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனை வழங் கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்கூட்டியே விதை நெல்லை கொள்வனவு செய்து பாதுகாப்பாக வைத் திருக்குமாறு நெற் பயிர்ச்செய்கையில் ஈடு படும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப் பதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் விதை நெல் உற்பத்தியா ளர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் விதை நெல்லை கொள்வனவு செய்து களஞ்சிப் படுத்தி வைத்து உரிய காலப் பகுதியில் பங்கீட்டு அடிப்படையில் வழங்குவதற்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித் தார். (அ-5)



நெல்லியடியில் திறந்து வைக்கப்பட்ட "கணனி காட்சியக"த் திறப்பு விழாவிலே இலங்கை வங்கி நெல்லியடி முகாமையாளர் வல்லிபுர தில்லைநாதன் மங்கள விளக்கேற்றி காட்சியகத்தைத் திறந்து வைப்பதையும், வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.எஸ்.தண்டபாணி தேசிகர் ஆசி வழங்குவதையும், இலங்கை வங்கியின் வட பிராந்திய இளைப்பாறிய உதவிப் பொது முகாமை யாளர் எஸ்.பாலசுப்பிரமணியம், யாழ். கணனி காட்சியக முகாமையாளர் எஸ்.சசிகரன், முகாமையாளர் எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரும் காணப்படுகின்றனர். (படம்:- பரு.நிருபர்)

# போலியான கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பித்து பெறப்பட்ட ஆசிரியர்களின் நியமனங்கள் ரத்து

## மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

போலியான கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பித்து ஆசிரியர் நியமனம் பெற்றவர் களின் நியமனங்களை இரத்துச் செய்வதற் கான ஏற்பாடுகளை மாகாணக் கல்வியமைச் சுக்கள் மேற்கொண்டு வருகின்றன.

மாகாணக் கல்வியமைச்சினால் மேற் கொள்ளப்பட்ட ஆசிரியர்களின் பரீட்சை சான் றிதழ்களை உறுதிப்படுத்தும் நடவடிக்கை யின் போதே இவ்வாறு பலர் போலிச் சான்றி தழ்களை சமர்ப்பித்துள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வழங் கப்பட்ட தொண்டர் ஆசிரியர் நியமனத்தின் போது கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் உடனடியாக சமர்ப்பிக்க முடியாது என்பதைக் காரணம் காட்டி பாடசாலை அதிபர்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களை சமர்ப்பித்து சிலர் ஆசிரியர் நியமனங்களைப் பெற்றுள்ளனர்.

இவர்களது பரீட்சை பெறுபேறுகள் தொடர் பாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தபோது சில திடுக்கிடும் உண்மைகள் வெளியாகி உள்ளன.

க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் ஒரு பாடத் தில் தானும் சித்தியடையாதவர்கள் மூன்று திறமைச் சித்திகள் பெற்றிருப்பதாக சான்றிதழ் சமர்ப்பித்து கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடத் துறைகளுக்கு ஆசிரியர் நியமனம் பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் பலர் பரீட்சைப் பெறுபேறுகளின் தரத்தை வேறுபடுத்தி இருப்பதும் கண்டுபிடிக் கப்பட்டுள்ளதுடன் பாடசாலைப் பரீட்சார்த்தி யாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற் றாத நிலையில் கணிதம், விஞ்ஞானத் துறை பாடங்களுக்கு தோற்றியதாக போலியாக தகவல்களை சமர்ப்பித்து ஆசிரியர் நியமனம் பெற்றிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. குறித்த நியமனத்தின் பெயரால் ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்கு படிப்பு லீவு பெற்றிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

கல்விச் சான்றிதழை உறுதிப்படுத்துவ தற்கு குறித்த பாடசாலை அதிபர்களின் அந் தரங்க அறிக்கைகள் அவர்களது பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான உண்மை நிலை யை வெளிப்படுத்தியதை அடுத்து அவர்களது மாதாந்தச் சம்பளம் வழங்குவது இடைநிறுத் தப்பட்டு பரீட்சைத் திணைக்களத்தில் பரீட்சை பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்கு சமர்ப் பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமது தவறான செய்ற்பாடு வெளிப்பட்டதை அடுத்து சம்பந்தப்பட்டவர் கள் பாடசாலைக்குச் செல்வதை கைவிட்டு வேறு தொழில்களைத் தேடிச் செல்லும் முயற்சியி லும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சு உயர் அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்,

வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு அமைய கல்வித் தகைமை இல்லாதவர்களின் நியம னங்கள் தற்பொழுது தற்காலிகமாக நிறுத்தப் பட்டு சம்பளம் வழங்குவதும் நிறுத்தப்பட்டுள் ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் அவர்களது நியமனங்கள் இரத்துச்செய்யப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (அ-5)

# திருவிளையாடற் புராணப் படிப்பு

(யாழ்ப்பாணம்)

யா/அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவிலில் கடந்த மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் தினமும் திருவிளையாடற் புராணம் படிக்கப்பட்டு வருகிறது.

இதன் பூர்த்தி விழா எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் பூசை நிறைவ டைந்ததும் நடைபெறவுள்ளது.

இந் நிறைவு விழாவில் திருவிளையாடற் புராணம் படித்தவர்கள் கௌரவிக்கப்படவுள் ளார்கள்.

கோவில் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட க்கம் நடைபெற்று வரும் பங்குனி அபிஷே கத்தையொட்டி இவ்வபிஷேக காலத்தில் இத் திருவிளையாடற் புராணம் படிக்கப்பட்டு வரு வது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# அருணலு பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

இலங்கை வர்த்தக வங்கியின் சாவகச்சேரி கிளை, எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சிறுவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வினை நடாத்த உள்ள தாக வங்கி முகாமையாளர் அறிவித்துள் ளார். (ஓ)

# தத்தெடுக்க விரும்புவோர் தொடர்புகொள்க

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தின் பராமரிப்பில் 2 வயது நிரம்பிய ஆண் குழந் தையொன்று இருப்பதாகவும், அக் குழந்தை யைத் தத்தெடுத்து வளர்க்க விருப்பமுடை யோர் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் பதிவாளர் சிவரூபன் அறிவித்துள்ளார். (ஓ)

# உள்ளூராட்சி ஆணையாளர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணை யாளர் பி.லோறன்ஸ் யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி சேவைகள் தொடர்பாக ஆராய் வதற்கு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள் ளார்.

ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சேவைகள் தொடர் பாக ஆராய்வதற்காக உள்ளூராட்சி ஆணை யாளர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள் ளமை இதுவே முதற் தடவையாகும். (சு)

# மத்தியஸ்தர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு சங்கானை மத்தியஸ் தர்கள் சபை/250 இரண்டாவது ஆண்டு நிறைவு டன் மத்தியஸ்தர் தின விழாவினை வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வட்டு இந்து கல்லூரியில் சங்கா னை மத்தியஸ்த சபை தவிசாளர் வை. சிவபாலன் ஜே.பி.தலைமையில் நடாத்தவுள் ளது.

விழாவின் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ், யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா ஆகியோ ரும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு, வலி.மேற்கு பிரதேச செயலாளர் திருமதி தேவநந்தினி பாபு, மத்தியஸ்த சபைகள் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் ச.சனார்த்தனன். சங்கானை தபால் அதிபர் கோ. யோகராசா, வட்டு.இந்துக் கல்லூரி அதிபர் ச.இராம லிங்கம், வட்டு.கிழக்கு கிராம அலுவலர் க. ஸ்ரீகரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள் ளனர். (ஓ)

# பாவனைக்குதவாத மாவை மீளப் பெறுமாறு கோரிக்கை

(அல்வாய்)

உலக உணவுத் திட்டத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முகமாக வழங் கப்பட்ட கோண் சோயா மா பழுதடைந்து உள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

குறிப்பாக பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் 350 கிலோவும், வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் 250 கிலோவும், தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் த. க.பாடசலையில் 300 கிலோவும், பழுதடைந் துள்ளது.

இவற்றை இப் பகுதி சுகாதாரப் பரிசோ தகர் பரிசோதனை செய்து இவை மனித பாவனைக்கு உதவாதவை என சான்றிதழ் வழங்கியுள்ளார்.

இவை களஞ்சியங்களில் நீண்ட கால மாக சேமித்து வைக்கப்பட்டிருப்பதால் ஏனைய உணவுப் பொருட்களும் பழுதடையும் அபாயம் உள்ளது. இதுதொடர்பாக வித்தியாலய அதிபர்கள் வடமராட்சி வலயக் கல்விப் பணிப் பாளருக்கு அறிவித்ததன் பேரில், அவர் உலக உணவுத் திட்டத்துக்கும், யாழ்.மாவட்ட செயல கத்துக்கும் அறிவித்துள்ளார். அவர் கள் இந்த மாவை மீளப் பெறுவதாக வாக்களித்திருந்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. இதனால் இப் பாடசாலை அதிபர் கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். எனவே உலக உணவுத் திட்டத்தினர் இவற்றை உடனடி யாக மீளப் பெற்றுக்கொள்ளவோ அல்லது முற்றாக அழித்தொழிக்கவோ அனுமதி வழங் கவோ வேண்டுமென்றும் அவ்வப் பாடசாலை அதிபர்கள் கோரியுள்ளனர். (ஓ-19)

# அரசியலமைப்புச் சபையை நியமிக்காதிருக்க எதிர்க்கட்சி இணங்கியது ஜனாதிபதி

## இலங்கையென மறுக்கிறார் ரணில்

(கொழும்பு)

17ஆவது சட்டமூலம் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைக்கப் பெறும்வரை அரசியலமைப்பு சபையை அமைக்க இயலாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஒருமுறை தெரிவித்துள்ளார். சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.



17ஆவது சட்ட மூலத்தில் ஏற்படுத்தீக் கூடிய மாற்றங்கள் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுடன் தாமும் இணைந்துகொள்வதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தன்னைச் சந்தித்த போது உறுதியளித்திருந்ததாக வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமுகப் பிரதிநிதிகளிடம் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைக்கும் வரை அரசியலமைப்புச் சபை நியமிக்கப்படமாட்டாது எனக்குறிப்பிட்டுள் ளார்.

ஜனாதிபதி இவ்வாறு கூறியிருந்ததை ஜனாதிபதியுடன் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட சகவாழ்வு மன்றத்தின் தலைவர் குமார் ரூபசிங்க ஆங்கில ஊடகமொன்றிடம் உறுதிப்படுத்தியிருந்தார்.

### ரணில் மறுப்பு

தெரிவுக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்வரை அரசியலமைப்புச் சபையை நியமிக்காமல் காத்திருப்பதற்கோ அல்லது தெரிவுக்குழுவுக்கு சொச்சியை பிரதிநிதியாக நியமிக்கவோ நான் இணக்கம் தெரிவித்திருக்கவில்லை. அரசியலமைப்புக்கு அமைய அரசியலமைப்புச் சபையை நியமிக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருந்ததுடன் தெரிவுக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்வரை அரசியலமைப்புச் சபையை நியமிப்பதை தள்ளிப்போட முடியாதெனவும் கூறியிருந்தேன் என, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க ஆங்கில ஊடக மொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புச் சபை கட்டாயமாக நியமிக்கப்படவேண்டும் என நான் ஜனாதிபதியிடம் கூறியிருந்ததுடன் தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் அவற்றைக் கவனத்தில் கொள்ளமுடியுமெனத் தெரிவித்திருந்தேன். இதற்காகவே தெரிவுக்குழுவின் அறிக்கைக்காகக் காத்திருப்பேன் என்று கூறியிருந்தேன் என எதிர்க்கட்சித்தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிநிதியாக சொக்சியை நியமிப்பதற்கே தான் இணங்கியிருந்ததாகவும் ரணில் விக்கிரம சிங்க அந்த ஊடகத்திடம் மேலும் கூறினார். (அ-5)



## பணிப்பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை நிறுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை!

(கொழும்பு)

• வெளிநாடுகளுக்கு வீட்டுப்பணிப் பெண்களை அனுப்பும் நடவடிக்கைகளை இவ்வருட இறுதிக்குள் நிறுத்துவதற்கு உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்கு விப்பு அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சுக்களின் செயலாளர்களுடனான சந்திப்பொன்றின் போதே ஜனாதிபதி இவ்வாறு பணித்துள்ளார். இச்சந்திப்பின் போது ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டவர்களுக்கு பணிவிடை செய்வதற்காக எதிர்காலத்தில் இலங்கையிலிருந்து பெண்களை அனுப்பக்கூடாது. அதேநேரம் இலங்கைப் பெண்கள் சிறந்த சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மருத்துவ தாதியர் போன்ற தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களை சிறந்த தொழில் துறைகளுக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அரசின் பிரதிநிதிகளாக வெளிநாடுகளில் பணிபுரியும் அதிகாரிகளின் பதவிக்காலத்தை 3வருடங்களாக மட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார். (அ-5)

# தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு நிர்வாகப் பயிற்சி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளூராட்சி மன்ற நிர்வாகம் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப் படவுள்ளதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகள் ஊடாக எவ்வாறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் நிர்வாகத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்பது பற்றியும் முழுமையான பயிற்சிகள் இதன்போது வழங்கப்படும். கொழும்பில் நடாத்தப்படவுள்ள இப் பயிற்சி நெறிக்கான ஏற்பாடுகள் ஓரிரு வாரங்களுக்குள் மேற்கொள்ளபடவிருக்கிறது.

ஆயுதக் குழுவாக இருந்தவர்கள் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளமை ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றியாகுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-5)

# வரலாற்றில் மிக மோசமான தலைவர் மஹிந்த ராஜபக்ஷ என்கிறது பௌத்த பிக்குகள் முன்னணி

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் மிக மோசமான தலைவர் மஹிந்த ராஜபக்ஷ என பௌத்த பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மக்கள் பிரிவினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பௌத்த பிக்குகள் முன்னணியின் முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட பௌத்த பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் கொலன்னே சாந்த ஸ்ரீ தேரர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டை மிக மோசமான அழிவினை நோக்கி கொண்டு செல்வதாகவும் இலங்கை வரலாற்றில் உருவான மிக மோசமான தலைவராக அவரே விளங்குவதாகவும் கொலன்னே சாந்த ஸ்ரீ தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு கருத்து வெளியிட்ட முன்னணியின் தலைவர் மாலபே சீலாரட்ன தேரர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி நீக்குவதற்காக வீதியில் இறங்கி போராடுவதற்கு மகாசங்கம் தயாராகவுள்ளதாகவும் இலங்கை வரலாற்றில் மிக மோசமான தலைவராக மஹிந்த ராஜபக்ஷ விளங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையை பௌத்த நாடாக கட்டியெழுப்பப் போவதாக கூறி அரசியல் நடத்த முற்பட்ட ஜாதிக ஹெல உறுமய தமது கோட்பாடுகளை கைவிட்டு அரசியல் சுய லாபத்திற்காக மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் தரமான அரசியல் நடவடிக்கைகளுக்கு துணை போவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (அ-5)

# சர்வகட்சி ஆலோசனை குழுவிற்கு த.ம.வி.பு.வந்தால் ஐ.ம.சு.மு.ஆதரவு

## முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதற்காக நிறுவப்பட்டுள்ள சர்வ கட்சி ஆலோசனை குழுவில் பங்கு பற்றுவதற்கு தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் (பிள்ளையான் குழு) வருவார்களாயின் அதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவு நல்கும் என்று முன்னணியின் பொதுச் செயலாளரும் கல்வியமைச்சருமான சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போது செய்தியாளர் கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அடிமட்டத்திலிருந்து அரசாங்கம் அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இந்நிலையில் இக் குழுவில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் இணைந்து கொண்டால் அதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவு நல்கும்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளே இந்தக் குழுவில் அங்கம் வகிக்க வேண்டும் என்ற வரன்முறையில்லை மாற்றங்கள் ஏற்படுகின்ற போது நாமும் சிலவிடங்களில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதன் அடிப்படையிலேயே பிரச்சினைக்கு தீர்க்கமான தீர்வொன்றை விரைவில் காணமுடியும் என்றார். (அ-5)

# ஊடகவியலாளர்கள் 6 பேர் தடுப்பு ஊடக அமைப்புகள் அவதானிப்பு

(கொழும்பு)

ஆங்கில செய்தி இணையத்தளமான அவுட்ரீச்எஸ்எல் உடன் தொடர்புடைய ஊடகவியலாளர்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறித்து சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகவியலாளர் அமைப்புக்கள் கவனம் செலுத்தியுள்ளன.

இந்த மாதம் 6ஆம் திகதி ஈ குவாலிட்டி அச்சகத்தின் உரிமையாளரும் எழுத்தாளரு மான ஜெசிதரன் மற்றும் அவருடைய மனைவி வளர்மதி ஆகியோர் தகுந்த காரணங்களின்றி குற்றத்தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவருடைய மடிக்கணனி மற்றும் அச்சுக்கான ஆவணங்கள் சிலவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தன. ஜெசிதரன் www.outreachsl.com எனும் இணையத்தளத்துக்கான எழுத்தாளராகவும் பணியாற்றி வந்தவர் என சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பு ஆகியன விடுத்துள்ள அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன் பின்னர் 7ஆம் திகதி குறிப்பிட்ட இணையத்தளத்தின் ஆசிரியரும் சுயாதீன ஊடகவியலாளருமான திஸநாயகம் என்பவர் குற்றத்தடுப்புப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இதனைவிட குறிப்பிட்ட இணையத் தளத்தின் ஊடகவியலாளர் விஜயசிங்க மற்றும் இணையத்தளத்தின் காண்பியத் தொகுப்பாளர் உதயனன், படப்பிடிப்பாளர் ரங்க ஆகியோரும் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என ஊடக அமைப்புக்கள் கூறியுள்ளன.

இதன் தொடர்ச்சியாக 7ஆம் திகதி சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் சிவகுமார் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். ஏனையவர்கள் குற்றப்பத்திரம் எதுவும் தாக்கல் செய்யப்படாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறித்து கவனம் செலுத்தியிருப்பதாக அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

சந்தேகத்துக்கிடமானவர்களைக் கைது செய்து விசாரணைசெய்யும் உரிமை பொலிஸாருக்கு இருக்கின்ற போதும் சட்டத்துக்கு உட்பட்ட வகையில் விசாரணைகள் நடத்தப் பட வேண்டுமென ஊடக அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (அ-5)

# வடக்கு -கிழக்கில் எயிட்ஸ் பரவும் அபாயம் கிழக்கு சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் எயிட்ஸ் நோய் பரவும் சாத்தியம் இருப்பதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரஞ்சனி தெரிவித்துள்ளார். இடம் பெயர்ந்த மக்கள் நலன் புரிநிலையங்களில் சுகாதார மற்ற முறையில் நெருக்கமாக வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறே தென் இந்திய நலன்புரி முகாம்களில் இடம்பெயர்ந்து வாழும் மக்களும் மீண்டும் திரும்புகின்றனர். இதன் காரணமாக எயிட்ஸ் நோய் பரவும் சாத்தியம் இருப்பதாகவும் அவர் சந்தேகம் தெரிவித்தார்.

எயிட்ஸ் நோய் தொடர்பாக அரச ஊழியர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோருக்காக நடத்தப்பட்ட செயலமர்வு ஒன்றிலேயே அவர் உரை நிகழ்த்தியுள்ளார்.

எச்.ஐ.வி. எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக்கருத்தரங்கு கிழக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் எம்.தேவராஸன் தலைமையில் கிழக்கு சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிக்கோட் நிறுவன நிதி உதவியில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொற்று நோய் ஏற்படுவ தற்கு கலாசாரமும் ஒரு காரணமாகும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற கலாசாரம் ஒன்றுண்டு.

வெளிநாடுகளிலிருந்து வருகைதரும் மக்களிடமிருந்து இங்குள்ளவர்களுக்கு இந்நோய் தொற்றும் சாத்தியக்கூறுகள் உண்டு.

24 வருடங்களாக இந்நோய் முற்றுமுழுதாக நிறுத்துவதற்கு மருந்துகள் இல்லை என ஆய்வுகள் மூலம் தெரியவருகின்றன. எயிட்ஸ் நோய்க்குத் தடுப்பூசி கண்டு பிடிக்கப்பட்டதாக அறியப்பட்டது.

இந்தத் தடுப்பூசி ஏற்றாதவர்களை விட ஏற்றியவர்களுக்கே இந்நோய் கூடுதலாகக் காணப்பட்டதாக ஆய்வு அறிக்கைகள் மூலம் தெரி யவந்துள்ளன.

இந்நோய்க்குப் புதிதாக தடுப்பூசி கண்டறியப் படவேண்டும். இந்நோய்க்கான பாதுகாப்பு முறைகள் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். இந்த விழிப்புணர்வுக்கருத்தரங்கு மூலம் நடைமுறையில் கலாசாரத்தைப் பேணி காப்பாற்ற வேண்டும்.

இந்நோய் பெண்களை விட ஆண்களுக்குத் தொற்றும் சாத்தியம் உண்டு. கணவன் மூலம் மனைவிக்கும் பின்னர் பிள்ளைகளுக்கும் ஏற்படக்கூடும். (அ-5)

# பாகிஸ்தானின் புதிய பாராளுமன்றத்தை 17ஆம் திகதி கூட்ட முஷாரப் அழைப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் புதிதாக பதவியேற்கவுள்ள பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தை எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை நடத்த உத்தியோகபூர்வ அழைப்பு விடுத்துள்ளார்.



பிரதமர் மொஹமெத்மியன் சூம்ரோ, பாராளுமன்றத்தினை கூட்டுவது சம்பந்தமாக தன்னால் கைச்சாத்திடப்பட்ட ஆவணமொன்றை இறுதி அங்கீகாரத்திற்காக ஜனாதிபதி முஷாரப்பிற்கு அனுப்பி வைத்திருந்தார்.

இந்நிலையில் மேற்படி ஆவணத்தில் முஷாரப் கைச்சாத்திட்டு பாராளுமன்றத்தை கூட்டுவதற்கான உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் அஸிப் அலி சர்தாரியும் 'பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - என்' என்ற கட்சியின் தலைவர் நவாஸ் ஷெரீபும் கூட்டமைப்பு அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கான முக்கியத்துவமிக்க அதிகாரப் பகிர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டு இரு நாட்கள் கழித்தே முஷாரஇந்த அழைப்பை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பதவியேற்கவுள்ள புதிய கூட்டமைப்பு அரசாங்கத்தில் அதிகாரப் பகிர்வு சுமுகமான முறையில் இடம்பெறும் எனத் தான் நம்புவதாக முஷாரப் குறிப்பிட்டார். புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரின் போது பதவியை விட்டு வெளியேறிச் செல்லவுள்ள சபாநாயகர் சௌத்ரி அமீர் ஹுஸைன் முன்னிலையில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்கவுள்ளனர்.

இதனையடுத்து பாராளுமன்ற கீழ் சபையானது புதிய சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் ஆகியோரைத் தெரிவு செய்யும். புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டம் தொடர்பான விடயங்கள் தற்போது நான்கு மாகாணங்களின் ஆளுநர்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர். இதன் அடுத்த கட்டமாக பாராளு மன்றமானது புதிய பிரதமரை தெரிவு செய்யும் எனவும் புதிய பிரதமர் ஜனாதிபதி முன்னிலையில் உத்தியோகபூர்வமாக தனது பதவியை பொறுப்பேற்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## பிரிட்டிஷ் விமானப்படை தாக்குதலில் 4பேர் பலி

(லண்டன்)

ஆப்கானிஸ்தானில் பிரிட்டிஷ் இராணுவத்தினர் நடத்திய விமானப்படை தாக்குதலில் ஹெல்மாண்ட் பகுதியில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

உலக தரிசனம்


பிரிட்டிஷ் இராணுவத்தின் விமானப் படை தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 4பேர் பலியான சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# அமெரிக்காவின் மத்திய கிழக்கிற்கான உயர் மட்ட கட்டளைத் தளபதி இராஜினாமா

மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியாவில் பணியாற்றும் அமெரிக்க படைகளுக்கான உயர்மட்ட கட்டளைத் தளபதி வில்லியம் பாலொன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஈரானுடனான போரைத் தவிர்க்கும்படி புஷ்ஷிற்கு வில்லியம் பாலொன் அழுத்தங் கொடுப்பதாக அண்மையில் ஈரானிய சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரையையடுத்தே, அவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் வில்லியம் பாலொன் விபரிக்கையில், மத்திய கட்டளை பிரிவின் கொள்கை இலக்குகள் தொடர்பில் எனக்கு ஏதாவது வேறு பாடுகள் இருந்ததாக நான் கருதவில்லை என்றபோதும் தற்போதைய எனது நிலையானது நான் கடமையாற்றும் பிரதேசத்தில் அமெரிக்காவின் அக்கறைகளை பயனுறுதிப்பாடு மிக்க வகையில் நிறைவேற்றுவதை கடினமாக்கியுள்ளது' என்று தெரிவித்தார்.



வில்லியம் பாலொனின் இராஜினாமா குறித்து அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ரொபேர்ட் கேட்ஸ் விபரிக்கையில், அமெரிக்க பாதுகாப்பு பிரிவானது பாலொனின் இராஜினாமாவை வருத்தத்துடன் ஏற்றுக்கொண்டதாக குறிப்பிட்டார்.

இது சரியான தீர்மானம் என்றே நான் நினைக்கிறேன். ஆனால் அவருடைய கண்ணோட்டத்திற்கும் அமெரிக்க நிர்வாகத்தின் கொள்கைகளுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடு இருப் பதாக நான் நம்பவில்லை என கேட்ஸ் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி தன்னால் எழுத்து பூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கையில், உலகின் மிகவும் பிரச்சினைக் குரிய பிராந்தியத்தில், அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அமெரிக்கப் படைகளை தயார் செய்வதற்கு உதவியமைக்கு பாலொனுக்கு தனது பாராட்டைத் தெரிவித்திருந்தார்.

அமெரிக்க கட்டளைத்தளபதியின் இராஜினாமாவானது ஈரான் தொடர்பான அமெரிக்க கொள்கைகளில் மாற்றம் எதுவும் ஏற்படுவதற்கான சமிக்ஞை அல்ல என அமெரிக்க பாதுகாப்புப் பிரிவு வலியுறுத்தியுள்ளது. (அ-5)

# மீண்டும் தற்கொலை படை தாக்குதல் நடத்தலாம்

## உள்துறை இலாகா எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் லாகூர் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை இரட்டை குண்டுவெடிப்பு நடந்தது. இந்த தற்கொலை படை தாக்குதலில் 100க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். புலனாய்வுத்துறை அலுவலகம் இதில் தகர்க்கப்பட்டது.

இதேபோல மேலும் பல நகரங்களில் ஒரே நேரத்தில் தற்கொலை படைத் தாக்குதல்களை நடத்த சதிக்கும்பல் திட்டமிட்டு இருப்பதாக உள்துறை இலாகாவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

ஏற்கனவே 600க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் நாட்டின் பல்வேறு நகரங்களுக்குள் ஊடுருவி இருப்பதாக உள்துறை எச்சரித்து இருந்தது.

எந்த நேரத்திலும் வெடி குண்டு தாக்குதல் நடத்தலாம் என்பதால் பாதுகாப்பை பலப்படுத்தும் படி அனைத்து மாநில அரசுகளையும் உள்துறை இலாகா எச்சரித்துள்ளது.

புலனாய்வுத்துறை அலுவலகத்தில் நடந்த வெடிகுண்டு தாக்குதலில் பலியானவர்களில் 12 பேர் உயர் பொலிஸ் அதிகாரிகள் என்று தெரியவந்துள்ளது.

லாகூர் வெடிகுண்டு தாக்குதல் தொடர்பாக சதிக்கும்பலை சேர்ந்த 13 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(அ-5)

# சிங்கத்தின் வாயில் சிக்கிய பெண் உயிர் தப்பி மீண்ட அதிசயம்

(லண்டன்)

சிங்கத்தின் வாயில் அகப்பட்டு அதிர்ஷ்டவசமாக உயிருடன் மீண்டார் ஆசிரியை.

பிரிட்டன் ஆரம்பப் பள்ளி ஆசிரியை யான கேட் ட்ரூ என்பவர், ஆபிரிக்க நாடான ஜிம்பாப்வேக்கு சுற்றுலா சென்றார். சிங்கங்களை இனப்பெருக்கும் செய்து, காட்டில் கொண்டு விடுவதற்கென தனி பூங்கா இங்கு உண்டு. சிங்கக் குட்டிகள் விளையாடுவதையும், உலாவுவதையும் அருகில் பார்த்து ரசிக்கலாம். கேட்ரூவும் இந்த சுற்றுலாவுக்கு சென்றார். பூங்காவிற்குள் அவர் சென்று கொண்டிருந்த போது, திடீரென பின்பக்கத்தில் ஒரு வயது சிங்கக் குட்டி அவர் மீது பாய்ந்தது.



இரு கால்களா லும், அவரை இழுத்து, தலையை வாயால் கவ்வியது. பீதியில் அலறினார் கேட். பாதுகாப் புக்கு வந்திருந்த வன அதிகாரிகள் விரைந்துசென்று, சிங்கக்குட்டியை துரத்தியடித்தனர். காயங்களுடன் மீட்கப்பட்ட கேட், முதலுதவி சிகிச்சைக்கு பின் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரது காயங்களுக்கு 30 தையல்கள் போடப்பட்டன.

தலையில், மூளையின் அடிப்பகுதி வரை சிங்கத்தின் பற்கள் பதிந்து இருந்தன. சிகிச்சை முடிந்த பின், சிங்கத்தின் வாயில் பிடிபட்ட அனுபவம் குறித்துச் சொன்னார் கேட், சிங்கத்திடம் நான் சிக்கிக் கொண்ட போது, மேலும் இரண்டு சிங்கங்கள் என்னை நோக்கி விரைந்து வந்தன. செத்துப் போவேன் என்று தான் நினைத்தேன். ஆனால், சிங்கம் என்னுடன் விளையாட்டில் ஈடுபட்டதால் நான் தப்பித்தேன்' என்று திகில் விலகாமல் கூறினார் கேட். கேட்டின் பிறவுன் நிற தலைமுடி, சிங்க முடியைப் போல இருப்பதால், தன்னுடன் விளையாடிக் கொண்டிருக்கும் சிங்கம் என்று நினைத்து கேட் மீது பாய்ந்து விட்டது சிங்கக் குட்டி. இது போன்ற சம்பவங்கள், இதுபோன்ற பூங்காக்களில் சகஜமாகி வருகிறது. பக்கத்து நாடான தான்சானியாவில் உள்ள, சிங்க இனப்பெருக்க பூங்காவில் ஆண்டுக்கு 100 சம்பவங்களாவது இது போன்று நடக்கிறது. (அ-5)

# பிஸ்கெட்டில் வைரக்கல் பிரிட்டிஸ் பெண்ணுக்கு அதிஷ்டம்?

(லண்டன்)

குளிர்பானத்தில் பல்லி, சாக்லெட்டில் புழு என்று தானே கேள்விப்பட்டி ருக்கிறீர் கள். இதோ பிரிட்டனை சேர்ந்த பெண்ணுக்கு பிஸ்கெட்டில் வைரக்கல் கிடைத்துள்ளது.

நம்புங்கள் உண்மைதான். பிரிட்டன் டேவன் பகுதியை சேர்ந்தவர் கிம்ஸ்டீட் வயது 40 நீச்சல் கிளப்பில் அதிகாரியாக பணியாற்றுகிறார். காலையில் எழுந்ததும் டீயும் பிஸ்கெட்டும் சாப்பிடும் பழக்கம் உண்டு. சமீபத்தில் வழக்கம் போல காலையில் டீயை பருகியபடி பாக்கெட்டில் இருந்து பிஸ்கெட்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்போது ஒரு பிஸ்கெட்டை கடித்தபோது பல்லில் ஏதோ கல் போல தடைப்பட்டது. பற்களின் இடையே பிஸ்கெட் அரைபட்டபோது அந்த சிறிய கல் மட்டும் கரகரவென சத்தத்துடன் பிஸ்கெட்டை சாப்பிடமுடியாமல் தடுத்தது.



இதனால் பற் களின் இடையே சிக்கிய கல்லை கிம், கையால் எடுத்துப்பார்த்தார். அவருக்கு பெரும் சந்தேகம் அது சாதாரண கல் இல்லை வைரக் கல்.

உடனே கிம்மின் மகள் பாக்கெட்டில் உள்ள எல்லா பிஸ்கெட்களையும் நொறுக்கிப் பார்த்தார். ஆனால் வேறு எந்த பிஸ்கெட்டிலும் வைரக்கல் கிடைக்கவில்லை என்று உறுதி செய்து கொண்டார். மெக் விட்டிஸ் என்ற கம்பெனி தயாரித்த பிஸ்கெட் அது. அந்த கம்பெனிக்கு போன் செய்து விஷயத்தை கிம் சொன்னார். எங்கள் அதிகாரி உங்களை வந்து பார்ப்பார்.

விசாரணை செய் வோம் என்று தெரிவித்தனர். அதிகாரியிடம் கிம் அந்த பிஸ்கெட்களையும் பல்லில் சிக்கிய வைரக்கல்லையும் கொடுத்தார். அவற்றை ஆராய்ந்த அதிகாரிகள் வைரக் கல் போல தெரியவில்லை சர்க்கரை கல்லாக இருக் கலாம் என்றனர்.

ஆனால் கிம் இதை ஏற்க வில்லை. நான் நீதிமன்றத்தில் இதை தாக்கல் செய்து கொள்கிறேன் அங்கு நீங்கள் பதில் சொல்லுங்கள் என்று கூறிவிட்டார்.

இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. பிஸ்கெட்டில் வைரக்கல் வந்தது குறித்து கம்பெனி விசாரணை செய்து வருகிறது. அதிகாரிகள் கூறுகையில் பிஸ்கெட் தயாரிப்பு முழுவதும் தானியங்கி மிஷின்கள் மூலம் நடக்கிறது. அப்படியிருக்கும் போது அவற்றில் வைரக்கல் இருக்க வாய்ப்பில்லை.

இதுவேடிக்கையாக உள்ளது. முழு விசாரணை செய்த பின் தான் இது பற்றி முடிவுக்கு வர முடியும் என்றனர். பிஸ்கெட்டில் வைரக்கல் பதிந்திருக்கவில்லை மேலோட்டமாக பதிந்திருந்தது.

ஊழியர் கையில் இருந்து கூட பிஸ்கெட்டில் பதிய வாய்ப்பிருக்கலாம் அது. வைரக் கல் தான் வேறு பொருள் அல்ல என்று கிம் கூறினார். (அ-5)

# மனித உரிமையை நிலைநாட்டு புத்தபிக்குகள் போராட்டம்

(பீஜிங்)

சீனா அருகே உள்ள திபெத் 1950 ஆம் ஆண்டுக்கு முன் தனி நாடாக இருந்தது. அந்த ஆண்டு திபெத்தை சீனா ஆக்கிரமித்தது. இதைததொடர்ந்து, அந்த நாட்டில் சீனா ஆட்சி நடந்து வருகிறது.

திபெத் இணைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, விடுதலை கோரியும் திபெத்தின் தலைநகரான லாசாவில் 600க்கும் மேற்பட்டபுத்த பிக்குகள் நேற்று முன்தினம் 2ஆவது நாளாக போராட்டம் நடத்தினார்கள். திபெத்தில் சீனா ஆட்சிக்கு எதிராக முதன் முதலாக தொடங்கிய கிளர்ச்சியின் 49 ஆவது ஆண்டு தினத்தையொட்டி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிக்குகள் "எங்கள் மக்களை விடுதலை செய்!" "எங்களுக்கு சுதந்திரம் கொடு!" "மனித உரிமையை நிலைநாட்டு" என்று கோஷமிட்டார்கள். அவர்களை கலைப்பதற்காக சீன இராணுவத்தின் கண்ணீர் புகை குண்டுகளை வீசினார்கள்.

இந்தப் போராட்டத்தை சமூக அமைதியை குலைக்கும் சட்டவிரோத நடவடிக்கை என்று சீன அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-5)

# தகவல் தொழில்நுட்பத்துறை அபிவிருத்தியே அடுத்த 5 ஆண்டுகளில் அரசின் இலக்கு

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

தகவல் தொழில்நுட்ப துறையை அபிவிருத்தி செய்வதே அடுத்த 5 ஆண்டுகளில் அரசாங்கத்தின் இலக்காகும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.



தற்போது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை சார்ந்த தொழில்களுக்கு வருடாந்தம் ஆயிரம் பேர் தேவைப்படுகின்றனர். ஆனால் ஒவ்வொரு வருடமும் இத் துறையில் 2500 பட்டதாரிகளையே உருவாக்க முடிகின்றது என்றும் அவர் சொன்னார்.

செலிங்கோ கூட்டு நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த (செலிங்கோ நெனசரண) கஷ்டப் பிரதேசங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 500 பாடசாலைகளுக்கு கணனி மற்றும் கற்கை உபகரணங்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இவ்வாறு கூறினார்.

தகவல் தொழில்நுட்பக் கல்வியை கிராமப் புறங்களுக்கு விஸ்தரிப்புச்செய்யுமுகமாக நாடெங்கிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 500 பாடசாலைகளுக்கு செலிங்கோ கூட்டு நிறுவனம் நவீன தொழில்நுட்பத்திலான கணனிகளையும் உபகரணங்களையும் வழங்கி வருகின்றது.

இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் குறித்த பாடசாலைகளுக்கு மேற்படி சாதனங்கள் வழங்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. இங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த மேலும் கூறுகையில்,

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் நாட்டின் கல்வித்துறையை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின்கீழ் அரசாங்கப் பாடசாலைகளுக்கு 27 ஆயிரம் ஆசிரியர்கள் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதேபோல் தோட்டப்புறப் பாடசாலைகளுக்கும் தமிழ்மொழி மூலமான ஆசிரியர்கள் புதிதாக நியமனங்கள் வழங்கப்பட்டு இருக்கின்றனர். இலங்கையில் இருக்கின்ற 9,714 பாடசாலைகளில் 70 வீதமான பாடசாலைகளைத் தவிர்ந்த ஏனையவை மின்சார வசதியில்லாத பாடசாலைகளாக இருக்கின்றன.

இவ்வாறான பாடசாலைகளின் தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இன்றைய நவீன உலகில் தகவல் தொழில்நுட்பம் அத்தியாவசியமானதாக அமைந்து விட்டது. தற்போது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்காக வருடாந்தம் 5 ஆயிரம் விண்ணப்பதாரர்கள் தேவைப்படுகின்ற வேளையில் ஒவ்வொரு வருடமும் 2500 பட்டதாரிகளையே எம்மால் உரு வாக்க முடிகின்றது.

இது விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பதனால் தகவல் தொழில்நுட்பக்கல்வியை பாடசாலைகளிலும் இணைத்துக் கொள்வதற்கான பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய தற்போது சுமார் 60 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 1,500 கணனி இயந்திரங்கள் நாடு தழுவிய ரீதியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்த கணனிகள் அனைத்தும் மின்சாரம் அல்லாத சூரிய சக்தியில் இயங்கும் கணனிகளாகும். மின்சார வசதியற்ற கிராமப்புறப் பாடசாலை களுக்கே இந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 5 வருட காலப்பகுதிக் குள் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படுகின்ற தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிகளை இலங்கைக்கும் பெற்றுக்கொடுப்பதே எமது அரசாங்கத்தின் இலக்காகும்.

### லலித் கொத்தலாவல

இங்கு உரையாற்றிய செலிங்கோ கூட்டு நிறுவனத்தின் தலைவரும், நெனசரண ஏற்பாட்டாளருமான தேசமான்ய கலாநிதி லலித் கொத்தலாவல கூறு கையில்,

நாட்டை கட்டியெழுப்புவதிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் தகவல் தொழில்நுட்பம் ஒரு முக்கிய சாதனமாக விளங்குகின்றது. இந்த யுகத்தில் தகவல் தொடர்பாடல் விஸ்தரிப்பு கருத்திட்டம் கிராமிய மட்டத்திற்கு இட்டுச்செல்லப்படுகின்ற ஆரம்ப நாள் இன்றாகும்.

நாட்டு மக்களின் வறுமையை ஒழிப்பதற்கும் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்குமான வேலைத்திட்டங்களில் முனைப்புடன் செயற்பட்டு வந்த செலிங்கோ கூட்டு நிறுவனம் தற்போது தகவல் தொழில்நுட்பத்தையும் அன்றாடக் கல்வியில் கணனியின் பயன்பாட்டையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் கஷ்டப்பிரதேச பிள்ளைகளுக்கு உதவும் ஒரு முயற்சியாகும்.

எமது கருத்திட்டத்தில் 3 இலட்சம் மாண வர்கள் நன்மையடையவுள்ளனர் என்பதில் எமக்கு மகிழ்ச்சியே. 110 மில்லியன் தொகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வேலைத்திட்டத்தின் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுக்கு கணனி மற்றும் உபகரணங்கள் வழங்கும் வைபவம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 31 ஆம்திகதிக்குள் அனைத்துப் பாடசாலை களுக்கும் இவ்வளங்கள் வழங்கப்பட்டுவிடும். (அ-5)

## அரச கரும மொழி திறன் காண் பரீட்சை

(கொழும்பு)

அரச கரும மொழித் திறன் காண் முதலாவது பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. ஆரம்ப நிலை , இரண்டாம் நிலை , விசேட திறமை ஆகிய மூன்று கட்டங்களில் இந்தப் பரீட்சை நடாத்தப்பட இருக்கின்றது. நாட்டின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த 7 ஆயிரத்துக்கும் அதிகமான அரச ஊழியர்கள் இந்தப் பரீட்டைசக்குத் தோற்றவிருக்கின்றனர்.

தமிழ் மொழித் திறன் பரீட்சைக்கென 5 ஆயிரம் ஊழியர்கள் தோற்றுவார்கள். அதே வேளைவடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் அதிக எண்ணிக்கையான அரச ஊழியர்கள் சிங்கள மொழித்திறன் பரீட்சைக்குத் தோற்றவிருப்பது முக்கிய அம்சமாகும்.

அரசியல் யாப்பு விவகார மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு தகவல் தருகையில் இந்த வருடம் யூலைமாதத்தின் பின்னர் அரசாங்க சேவையில் சேர்ந்து கொள்ளும் சகல ஊழியர்களும் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் திறமை பெற்றிருப்பது கட்டாயம் ஆகும் என்று தெரிவித்துள்ளது. இந்தப் பரீட்சையில் சித்தி யெய்தியவருக்கு சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும். அமைச்சர் டியூ குணசேகர கருத்துத் தெரிவிக்கையில், சிங்கள மற்றும் தமிழ் மொழி களில் தேவை யான திறமை யைப் பெற்றவர்கள் ஆங்கில மொழியை இணைப்பு மொழி யாகவுமே உபயோகிக்க வேண்டுமென்றுகேட்டுள்ளார். (அ-5)


## மக்கள் வங்கி அறிவித்தல்

**மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.12.2006ற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.**

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.பிரதான வீதி -104 | 2008.03.29<br>2008.03.30<br>2008.04.05<br>2008.04.06<br>2008.04.07<br>&<br>2008.04.08 | மக்கள் வங்கி, யாழ்/கன்னாதிட்டி -284 |
| 2 | சேவை நிலையம், உரும்பிராய் | | |
| 3 | சாவகச்சேரி- 110 | | |
| 4 | சேவை நிலையம், கொடிகாமம் | | |
| 5 | யாழ். பல்கலைக்கழகம் -162 | | |
| 6 | சேவை நிலையம், திருநெல்வேலி | | |
| 7 | யாழ்.கன்னாதிட்டி -284 | | |
| 8 | சேவை நிலையம், இணுவில் | | |
| 9 | யாழ்.ஸ்ரான்லி வீதி-030 | | |
| 10 | சேவை நிலையம்,மானிப்பாய் | | |
| 11 | காங்கேசன்துறை -031 | | |
| 12 | சேவை நிலையம்,மல்லாகம் | | |
| 13 | அச்சுவேலி-107 | | |
| 14 | சங்கானை-108 | | |
| 15 | சுன்னாகம்-109 | | |
| 16 | வல்வெட்டித்துறை-141 | | |
| 17 | நெல்லியடி-106 | | |
| 18 | பருத்தித்துறை-285 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப் பொதுமுகாமையாளர்
வடவலயம்,

மக்கள் வங்கி
பிரதேச காரியாலயம்
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/854)


## 10 வீதமானவர்கள் வாக்குகளை செல்லுபடியற்றதாக்கியுள்ளனர்

### பவ்ரல் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

நடைபெற்று முடிந்த மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் விருப்பமில்லாதவர்கள் அளித்த வாக்குகளாலேயே 10 வீதமான வாக்குகள் செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளது என பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிகோ தெரிவித்துள்ளார்.

"தேர்தல்களில் விருப்பமில்லாத மக்கள் தமது வாக்குகளைச் செல்லுபடியற்றதாக்கியுள்ளனர். இவ்வாறு செல்லுபடியற்றதாக் கப்படும் வாக்குகளில் 6 வீதமானவற்றைத் தொடர்ந்து நடைபெறும் தேர்தல்களிலும் எதிர்பார்க்க முடியும் என கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத்தெரிவித்திருக்கும் கிங்ஸ்லி ரொட்றிகோ கூறினார். எனினும், சராசரியான அளவை விடக் கூடுதலான அளவே இம்முறை தேர்தலில் வாக்களிக்கப்பட்டுள்ளது என்றார் அவர். தேர்தல்களில் விருப்பமில்லாத, கிழக்கு மாகாணத்தில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலையை விரும்பாத வாக்காளர்கள் தமது வாக்குகளை செல்லுபடியற்றதாக்கியுள்ளனர்'' என கிங்ஸ்லி ரொட்றிகோ கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இரண்டு சிங்கள வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

**மட்டக்களப்பு மாநகர சபை முதல் வராக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த பத்மினி தெரிவு**

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வராக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் முதன்மை வேட்பாளர்களில் ஒருவரான பத்மினி என அழைக்கப்படும் சிவகீதா பிரபாகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டிருக்கிறது. இதற்கமைய முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ராஜன் சத்தியமூர்த்தியின் மகளான பத்மினி 4722 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்.

பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் கிருஷ்ணராஜா அடுத்தபடியான கூடுதல் விருப்பு வாக்குகளை பெற்றுக்கொண்டதாகவும், தமது தீர்மானங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவுக்கு அறிவிக்கப்படுமென தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார். (அ-5)

## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு புதிய ஆணையாளர் நியமனம்

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகமாக சஹம்பத்தி அங்கம்பன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை இந்தப் பதவியை வழங்கியுள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தராக பணியாற்றிய இவர் 1976இல் அரசசேவையில் இணைந்துகொண்டவராவார் எனவும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (அ-5)

## சர்வதேச பிரபலங்கள் பட்டியலில் இசையமைப்பாளர் ரஹ்மான்



உலக பொருளாதார அரங்கில் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் இடம்பெற்றுள்ளார். சர்வதேச அள வில் பிரபலமாக விளங்கும் முக்கிய பிரமுகர்கள் பட்டியலை உலக பொருளாதார அரங்கு வெளியிட்டுள்ளது.

உலகம் முழுவதும் பிரபலமாக உள்ள 245 பேர் இந்த அரங்கில் இடம்பெற்றுள்ளனர்.

தங்களது தொழிலில் முழு ஈடுபாட்டுடனும் சமூக அக்கறையுடனும் செயல்படும் முக்கிய பிரமுகர் கள் இப் பட்டியலில் இடம்பெறுவர். அந்த வகையில் அனைத்து துறைகளைச் சார்ந்தவர்களும் இதில் இடம்பெறுகின்றனர். (அ-5)

## பங்களாதேஷ் அணி பாக்.செல்ல முடிவு

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி, பாகிஸ்தான வருவதை ஒத்திவைத்ததையடுத்து அந்த காலகட்டத்தில் வேறு நாடுடன் விளையாட பாகிஸ்தான் முடிவு செய்து, உனடியாக பேச்சு வார்த்தையில் இறங்கியது. இதன்படி வங் களா தேஷ் கிரிக்கெற் சபையுடன், பாகிஸ்தான் கிரிக்கெற்சபை பேச்சுவார்த்தை நடதத்தியது.

பாகிஸ்தானின் அழைப்பை பங்களா தேஷ் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. இதன் படி பாகிஸ்தானுக்கு சென்று, 5 ஒரு நாள் போட்டி மற்றும் 'இருபது-20' கிரிக்கெற் தொடரில் விளையாட கெள்கை ரீதியில் பங்களா தேஷ் ஒப்புக்கொண்டு இருக்கிறது. விரைவில் போட்டி அட்டவணை அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## மினி உலகக் கோப்பையில் ஆஸி.இந்தியா ஒரே பிரிவில்

(டுபாய்)

மின் உலகக்கோப்பை என அழைக்கப்படும் ஐ.சி.சி.சம்பியன்ஷிப் போட்டியில், ஒரே பிரிவில் இந்திய அவுஸ்திரேலிய அணிகள் இடம்பெற்றுள்ள. ஐ.சி.சி சம்பியன்ஷிப் போட்டி செப்ரெம்பர் 2008இல் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது.


மார்ச் 12 ஆம் திகதி ஐ.சி.சி தரப்பட்டியலை அடிப் படையாகக் கொண்டு இதில் பங்கு பெறும் அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியதீவுகள் அணிகள் இடம்பெற்றுள்ளன. 'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, இலங்கை, இங்கிலாந்து போன்ற அணிகள் இடம்பெற்றுள்ளன. (5)

# அம்புருஸ், கொலின்வூட் இணைப்பாட்டத்தால் சரிவிலிருந்து மீண்டது இங்கிலாந்து அணி

## முதல் ஆட்டத்தில் 5 விக்கெற்றிழப்புக்கு 291

(வெலிங்டன்)

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அம்புருஸ், கொலின்வூட் ஆகியோரின் சிறப்



பான இணைப்பாட்டத்தால் சரிவிலிருந்து மீண்டது இங்கிலாந்து அணி.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.


இத் தொடரின் முதலாவது போட்டியில் வெற்றிபெற்று நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ள நிலையில் தீர்க்கமான இரண்டாவது போட்டி நேற்று வெலிங்டனில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான குக், அணித்தலைவர் வோகன் ஆகியோர் சிறப்பான முதலாவது விக்கெற் இணைப்பாட்டமாக 79 ஓட்டங்களை எடுத்த போதும் தொடர்ந்து களமிறங்கிய ஸ்ரொஸ் 8, பெல் 11, பீற்றர்ஸன் 31, ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 136 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 5 விக்கெற்றுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் ஆறாவது விக்கெற்றுக்காக இணைந்த கொலின்வூட், அம்புருஸ் ஜோடியின் பிரிக்கமுடியாத 155 ஓட்டங்களினால் இங்கிலாந்து அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேரமுடிவில் அதன் முதல் இன்னிங்ஸில் 5 விக்கெற்றுக்களையிழந்து 291 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் ஆட்டமிழக்காமல் அம்புருஸ் 97



ஓட்டங்களையும் கொலின்வூட் 48 ஓட்டங்களையும் மெடுத்து துடுப்பெடுத்தாடி வருகின்றனர்.

முன்னதாக குக் 44, வோகன் 32 ஓட்டங்களையுமெடுத்து ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஜேக்கப் ஓரம் 2 விக்கெற்றுக்களையும் மார்டீன், மில்ஸ் மற்றும் கில்லஸ்பி ஆகியோர் தலா ஒரு விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

போட்டிகள் இரண்டாவது நாள் ஆட்டம் இன்றாகும். (5)

## அணியிலிருந்து நீக்கம்

# சர்வதேச கிரிக்கெற்றிலிருந்து ஓய்வு பெறப்போகிறேன்



## அன்ரூ நெல் எச்சரிக்கை

(ஜோகன்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்க அணியிலிருந்து நீக்கப் பட்டுள்ள வேகப்பந்து வீச்சாளர் அன்ட்ரூ நெல், சர்வதேச கிரிக்கெற் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களின் ஒருவராக அன்ட்ரூ நெல் திகழ்கிறார். எனினும் இந்தியா வுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் தேர்வு செய்யப்படவில்லை.

தென்னாபிரிக்கா அணியில் கறுப்பினத்தைச் சேர்ந்த வீரர்கள் குறைந்தது 6 பேராவது இடம்பெற்றிருக்க வேண்டும் எனும் நிர்ப்பந்தத்தை அடுத்து அவர் அணியிலிருந்து நீக்கப்பட்டு லாங்வெல்ட் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்த முடிவால் கொதித்து போயுள்ள அன்ரூ நெல் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார். (5)

# இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்க அணியில் கிப்ஸ் நீக்கம்

(டர்பன்)

இந்திய டெஸ்தொடருக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அனுபவ வீரர்களான கல்லிஸ் பௌச்சர் நிட்னி மீண்டும் இடம் பெற்றுள்ளனர். மிக வும் எதிர்பார்க்கப்பட்ட கிப்ஸ் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். இந்தியா வரும் தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் எதிர்வரும் 26ஆம் திகதி சென்னையில் ஆரம்ப மாகிறது.



இதற்கான தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. சமீபத்தில் நடந்த பலம்குன்றிய பங்களாதேசிற்கு எதிரான ஒரு நாள் தொடரில் காலிஸ் பௌச்சர் நிட்னி ஆகிய நட்சத்திர வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு இருந்தது. இவர்கள் மூ வரும் மீண்டும் அணிக்கு திரும்புகின்றனர். இவர்களது வருகை இந்தியாவுக்கு கடும் சவாலை தரக்கூடும் ஏற்கனவே சச்சின் உள்ளிட்ட 7 வீரர்கள் காயத்தால் அவதிப்படுவதால் இந்தியாக்கும் பெரும் சோதனை காத்திருக்கிறது.

**ஸ்டைன் பலம்** வேகப்புயல் நிட்னி வர வால் தென்னாபிரிக்காவின் பந்து வீச்சு அசுர பலம் பெறுகிறது. மற்றொரு வேகப் பந்துவிச்சாளரான டேல் ஸ்டைனும் சூப்பர் போர்மில் உள்ளார். அடுத்த அலன் டொனால்டு என வர்ணிக்கப்படும் இவர் தென்னாபிரிக்கா கடைசியாக பங்கேற்ற மூன்று டெஸ்ட் தொடர்களிலும் நியூசிலாந்து மேற்கிந்தியதீவுகள் பங்களா தேஷ் தொடர் நாயகன் விருது வென்றுள்ளார். 20 டெஸ்ட் போட்டிகளில் 100 விக்கெட் வீழ்த்தி சாதித்துள்ளார். அன்ரூ நெல்நீக்கப்பட்டு ஸ்விங் பந்து வீச்சில் கில்லாடியான லாங் வெல்ட் வாய்ப்பு பெற்றுள்ளார்.

**கிப்ஸ் நீக்கம் :** கிரிக்கெற் சூதாட்ட சர்ச்சை கிப்ஸ் இம்முறை இடம்பெறவில்லை. மோசமான போர்ம் காரணமாக பங்களாதேஷிற்கு எதிரான சமீபத்திய டெஸ்ட் தொடரில் கூட இவர் வாய்ப்பு பெறமுடியவில்லை. அதிரடி துடுப்பாட்ட வீரரான இவர் இல்லாதது நமக்கு சாதகமான விஷயம்.

**இரட்டை சுழல்:** இந்திய ஆடுகளங்களை மனதில் வைத்து ரொபின் பீட்டர்சன் போல் ஹரிஸ் ஆகிய இரண்டு சுழற்பந்துவீச் சாளர்கள் இடம்பெற்றுள்ளனர். பங்களா தேஷிற்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் சுழலில் மிரட்டிய பீட்டர்சன் 5 விக்கெற் வீழ்த்தி அசத்தினார். இதே டெஸ்டில் முதல் விக்கெற்றுக்கு 415 ரன்கள் சேர்த்து சாதனை படைத்த அணித்தலைவர் ஸ்மித் நீல் மெக்கன்சி இந்திய தொடரிலும் ஆரம்ப வீரர்களாக களமிறங்குவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. துணை அணித் தலைவரான அஷ்வல் பிரின்ஸ் தொடர்கிறார்.

**சர்ச்சை இல்லை:** பங்களாதேஷ் தொடருக்கான அணியை முதலில் அறிவித்த போது நான்கு கறுப்பு இன வீரர்கள் மட்டுமே இடம் பெற்று இருந்தனர். இதற்கு தென்னாபிரிக்க கிரிக்கெற் சபை தலைவர் நார்மன் அரண்ட்சே கடும் எதிர்ப்பு தெரிவித்து அனுமதி மறுத்தார். இது தொடர்பாக சபை பொதுக் குழுவில் விவாதிக்கப் பட்டது. கறுப்பு இன வீரர்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என வலியுறுத் தப்பட்டது. பின்னர் ரொபின் பீட்டர்சன் சேர்க்கப்பட்ட பிரச்சினை முடிபுக்கு வந்தது. இதனை உணர்ந்து இம்முறை அறிவிக்கப்பட்டுள்ள 14 பேர் கொண்ட அணியில் நிட்னி. ஹஷிம் அமலா, பிரின்ஸ், டுமினி, ரொபின் பீட்டர்சன், லாங்வெல்ட் என 6 கறுப்பு இன வீரர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

**அணிவருமாறு:-** கிரேம் ஸ்மித் அணித் தலைவர் அஷ்வல் பிரின்ஸ் துணை தலைவர் ஹஷிம் அம்லா, மார்க்பௌச்சர், டிவில்லியர்ஸ், டுமினி போல், ஹரிஸ், கலிஸ்லாங் வெல்ட், நீல், மக்கன்சி, மோர்க்கல், நிட்னி, ரொபின் பீட்டர்சன், டெல் ஸ்டைன். (5)

# இந்தியாவுக்கு உண்மையான சவால் இனித்தான் ஆரம்பமாகவுள்ளது

## என்கிறார் பிரைன் லாரா

அவுஸ்திரேலியாவை தோற்கடிக்க இந்திய அணிக்கு உண்மையான சவால் இனித்தான் ஆரம்பமாகிறது என்று லாரா கூறியுள்ளார். மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் பிரைன் லாரா டெல்லியில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது,

இந்திய கிரிக்கெற் அணிக்கு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கு தனித்தனியாக புதிய அணித்தலைவர் நியமிக்கப்பட்டனர். இருந்த போதிலும் இந்திய அணி அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்தி இருப்பது உண்மையிலேயே சிறப்பு வாய்ந்ததாகும்.

ஆனால் தோல்வி கண்ட அவுஸ்திரேலியா வலுவான அணியாக வீறு கொண்டு எழுந்து இந்தியாவை பழிவாங்க துடிக்கும். எனவே இந்தியாவுக்கு இனிமேல் தான் உண்மையான சவால் ஆரம்பமாகிறது.

கும்ளேயும், தோனியும் சிறப்பாக செயல் பட்டனர். ஆனால் அவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். முத்தரப்பு ஒருநாள் போட்டியில் பெற்ற வெற்றியால் மெத்தனமாக இருந்து விடக்கூடாது. தொடர்ந்து இந்த நிலையை தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.

**டெண்டுல்கர் பற்றி**

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டு இறுதிப் போட்டியிலும் சச்சின் டெண்டுல்கர் (117, 91) ஓட்டங்கள் அபாரமாக ஆடினார். அவர் தலைசிறந்த வீரர் என்று பல முறை சொல்லி இருக்கிறேன்.

அதையே திரும்பவும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவுஸ்திரேலிய முன்னாள் பயிற்சி யாளர் ஜோன் புக்கானன் இந்த தொடர் ஆரம்பமாவதற்கு முன்பாக டெண்டுல்கரை சீண்டிவிட்டது (அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர்களின் ஷோட்பிச் பந்துக்கு டெண்டுல்கர் திணறுவார் என்று சொல்லி இருந்தார்) தவறானதாகும். இது டெண்டுல்கரை மேலும் சிறப்பாக செயல்பட தூண்டியிருக்கும்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியை மகிழ்ச்சியுடன் விளையாடினேன். ஆனால் 2 கிரிக்கெற் ஆர்வம் கொண்ட போட்டியாகும். இந்த வகை போட்டியில் ஆடுவதிலும் மகிழ்ச்சி



அளிக்கிறது. இருபது-20 போட்டிக்கு மிகப் பெரிய எதிர்காலம் உள்ளது இவ்வாறு லாரா கூறினார்.

கபில்தேவ் தலைமையில் செயல்படும் இந்திய கிரிக்கெற் லீக்கில் (ஐ.சி.எல்) ஒப்பந்தம் ஆன லாரா கடந்த ஆண்டு நடந்த ஐ.சி.எல் 'இருபது-20' போட்டியில் ஜொலிக்க வில்லை. 4 ஆட்டத்தில் மொத்தம் 24 பந்துகளை மட்டுமே சந்தித்த அவர் வெறும் 16 ஓட்டங்கள்தான் எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

> மாமி பெரியவள்; மருமகளும் பெரியவள்; பானை பொங்குகிறது; யார் பானையை இறக்கி வைப்பது?
> —இந்தியா

வலம்புரி

## இந்தியாவின் ஒப்பனையில் இலங்கை அரசின் விநோத உடை

இலங்கையில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுவதாக உலகப் பொது அமைப்புகளும், உலக நாடுகளும் கண்டனம் தெரிவித்த வண்ணம் உள்ளன.

ஐ.நா. சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரின் முடிவின்படி ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தை இலங்கையில் அமைப்பதே இங்கு இடம்பெறும் மனித உரிமைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரே வழியாகும்.

எனினும் அவற்றையெல்லாம் இலங்கை அரசு தூக்கி எறிந்து உதாசீனம் செய்துவிட்டது. இறுதியாக இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து அமெரிக்கா தனது கவலையையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெறும் இனப் போர் தொடர்பில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை அரசுக்கு பூரண ஆதரவும், நிதியுதவியும் வழங்கி வந்த நாடுகள் இப்போது தமது நிலைப்பாடுகளை மாற்றி வருகின்றன.

இதன் விளைவு இன்னும் ஒரு சில வருடங்களில் மிகவும் மோசமாக இறுக்கமடைந்து இலங்கை அரசுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

உலக நாடுகளின் இந்த இறுக்கமான போக்கை தளர்த்துவதற்காக இலங்கை அரசு சர்வகட்சிக் குழுக் கூட்டத்தை ஏற்பாடு செய்து 13-வது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவதாக அறிவித்துள்ளது.

இந்த அறிவித்தல்களில் இருக்கக் கூடிய தொய்வுகளை நிவர்த்தி செய்வதற்காக மட்டக்களப்பில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலை அரசு சர்வதேசத்தின் முன்பாக நிறுத்தி காட்டாப்புக் காட்டுகின்றது.

எனினும் உலக நாடுகளும், மனித நேய அமைப்புகளும் இவற்றை நம்பத் தயாரில்லை. அவற்றின் கோஷமெல்லாம் இலங்கையில் மிக மோசமாக மனித உரிமை மீறப்படுகின்றது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதாகி விடுகின்றது.

இந் நிலையில் இலங்கை அரசு நடிக்கும் விநோத உடைக்கு இந்தியா ஒப்பனை செய்வது வேதனைக்குரிய விடயமாகும். 13-வது திருத்தச் சட்ட மூலம் இந்தியாவின் ஆலோசனையின்படியாக மேற்கொள்ளப்படுவதாக இருந்தால் மனித உரிமையைக் காக்கும் விடயத்தில் இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்க இந்தியா பின்னிற்பது ஏன்? என்ற கேள்வி நியாயமானதாகும்.

சர்வதேசப் பொது அமைப்புகள் அனைத்தும் இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் க்ண்டிக்கும்போது, இந்தியா மட்டும் மௌனம் சாதிப்பது எதற்காக?

இலங்கையில் மனித உரிமை மீறப்படுவதாக அமெரிக்கா கண்டனம் தெரிவித்தால் இந்தியா தனது தலையீட்டை இலங்கையில் ஸ்திரப்படுத்த முற்படுகின்றது.


ஆனால் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் இம்மியும் கிடையாது.

ஆக, உலக அரங்கில் இலங்கை அரசு விநோத உடையில் நடித்துக் காட்ட அதற்கு இந்தியா வகை வகையான ஒப்பனை செய்து வருகின்றது என்பதே உண்மை.

# கிழக்கின் அபிவிருத்திக்கு உதவுமாறு அனைத்துலகத்திடம் ரோகித வேண்டுகோள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு அனைத்துலக நாடுகள் உதவியளிக்க வேண்டும் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகம வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.



கொழும்பில் உள்ள அனைத்துலக நாடுகளின் தூதுவர்களை இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ரோகித போகல்லாகம கடந்த புதன்கிழமை முற்பகல் சந்தித்து கலந்துரையாடினார்.

வெளிவிவகார அமைச்சகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் பல்வேறு நாடுகளின் தூதுவர்களும் கலந்து கொண்டனர் என்று வெளிநாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இச் சந்திப்பில் மட்டக்களப்பில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத்தேர்தல் குறித்தும் கிழக்கில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் குறித்தும் விளக்கியிருக்கும் அமைச்சர் ரோகித போகல்லாகம கிழக்கின் அபிவிருத்திக்கு அனைத்துலக நாடுகள் உதவ முன்வர வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்திருந்தார்.

இச் சந்திப்பையடுத்து ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்திய அமைச்சர் ரோகித போகல்லாகம அந்த மாநாட்டில் தெரிவித்துள்ளதாவது,

கிழக்கில் 14 வருடங்களுக்கு பின்னர் தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு நடத்தியிருக்கிறது. இத்தேர்தலில் மக்கள் சுதந்திரமாக வாக்களித்திருக்கின்றனர்.

இத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பை அரசியல் நீரோட்டத்தில் இணைக்கும் முயற்சியில் அரசு வெற்றிகண்டு விட்டது. அடுத்து மாகாண சபைத் தேர்தல் நடைபெறும்.

மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்ட நிர்வாகம் அமுலுக்கு வந்தவுடன் அனைத்து கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதித் தீர்வுத்திட்டத்தை மாகாண நிர்வாக சபை ஊடாக அரசு நடைமுறைப் படுத்தும்

அரசாங்கத்தின் இந்த முயற்சிக்குகுறிப்பாக கிழக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கு அனைத்துலக நாடுகள் அனைத்தும் உதவியளிக்கும் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளன என்றார் அவர். (அ-5)

# இராணுவம்-புலிகள் மோதலால் சுற்றுலாத் துறை பாதிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே நடக்கும் சண்டையால் சுற்றுலா பயணிகளின் வருகை குறைந்துள்ளது.

இலங்கையின் இயற்கை சூழல் மிக்க பகுதிகளை பார்ப்பதற்காக ஐரோப்பிய நாட்டு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வந்தனர். 2006ஆம் ஆண்டில் நான்கு லட்சத்து 94 ஆயிரம் சுற்றுலா பயணிகள் இலங்கை வந்தனர். இந்த எண்ணிக்கையை ஆறு இலட்சம் வரை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டது. விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டதால் சுற்றுலா பயணிகளை கவர்வதற்கான திட்டங்கள் பயனளிக்கவில்லை.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 43 ஆயிரத்து 551 வெளிநாட்டு பயணிகள் இலங்கை வந்தனர். ஆனால் இந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 40 ஆயிரத்து 551 பயணிகள் மட்டுமே வந்தனர். பெல்ஜியம், நெதர்லாந்து, நோர்வே நாட்டு பயணிகள் தான் இலங்கைக்கு அதிகளவில் வருவர்.

தற்போது அங்கு சண்டை நடப்பதால் பெரும்பாலான இடங்களை அவர்களால் சுற்றிப் பார்க்க முடிவதில்லை.

இதனால் அவர்கள் இலங்கை வருவதை தவிர்ப்பதாக இலங்கை சுற்றுலா துறை அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (அ-5)

# பிரதியுபகாரம் கருதாது உதவிடுவோம்

எமது அன்றாட வாழ்வில் பலவித உதவிகளைப் பெறுகின்றோம். அதனை நாமும் செய்கின்றோம் இவ்வுதவிகள் எந்த நேரத்தில் எந்த நோக்கத்தில் அமைகின்றன? சில உதவிகள் எமக்கு வேண்டியவர்கள், உறவினர்கள் என்ற ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றது. இன்னும் சில உதவிகள் பெயர் , புகழ் ,தலைமைத்துவம் என்பவற்றை நிலை நிறுத்தும்

### தவக்காலப் பொழிவு

நோக்கில் இடம்பெறுகின்றது. பிரதியுபகாரத்தை எதிர்பார்த்து செய்யும் உதவிகளும் உள்ளன. உதவி செய்வதாகக் கூறி உபத்திரவம் கொடுப்பவர்களும் உண்டு. பிறரன்போடு செய்யும் சேவை உள்ளங்களும் இல்லாமலில்லை இவற்றுள் நாம் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்? சுமையைக் குறைக்கும் சுமைதாங்கிகளா? கழுத்தை நெரிக்கும் நுகத்தடிகளா? மேலே செல்ல உதவும் ஏணியைத் தூக்கி எறிபவர்களா? சிந்திப்போம்.

வாழ்வின் சுமைகளாலும் இயற்கையின் சீற்றங்களாலும் அடக்கு முறை, வறுமை, போரின் தாக்கங்களாலும் நொந்துபோன பல்லாயிரம் மனித உள்ளங்கள் பல்வேறு உதவிகளை எதிர்பார்த்து எம் அயலிலும் சமூகத்திலும் வாழ்கிறார்கள். தமது உள்ளச் சுமைகளை பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் மின்றி மௌனித்துள்ளார்கள். அன்பின்றி , ஆறுதல் இன்றி , சமாதான மின்றி , ஆதரவின்றி கைவிடப்பட்ட நிலையில் வாழ்வோர் எம்மிடையே அநேகர் உள். எனவே சீமோனைப்போல , நல்ல சமாரியன் போல உதவ முன்வருவோம். எம்மை அன்பு செய்வோருக்கு மட்டுமன்றி பகைவருக்கும் முகவரி தெரியாதோருக்கும் புறவினைத் தாருக்கும் பலனை எதிர்பாராது பணி புரிவோம். உறவுகளைப் பலப்படுத்துவோம். தகுந்த சன்மானத்தை இறைவன் எமக்கு அளிப்பார்.



யாரோசெய்த ஆடை எம் மானம் காக்கிறது. எவரோ ஊற்றிய நீர் தேங்காய் ஆகின்றது , விவசாயிகளின் வியர்வையில் விழைந்த நெல்மணிகள் உணவாகின்றது .அதேபோன்று நாம் செய்யும் உதவிகளின் பலனை இன்னொருவர் வழியாக இறைவன் எமக்கருள்வார் என நம்புவோம்.

எஸ்.யேசுதாஸ்

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ்

சிறுவயதில் வழிபாட்டில் மனம் செலுத்துவதற்கு தாயின் பயிற்றுதல் அவசியம். சமயகுரவர்களில் வயதில் மிகவும் இளையவர் சம்பந்தர். அவருடைய சிறுபிராயத்தில் ஏற்பட்ட தெய்வீக அநுபவம் தேவாரம் பாடச் செய்தது. தந்தை நீராடச் சென்ற போது தானும் கூடவருவேன் என அடம்பிடித்துச் சென்ற குழந்தை ஞானசம்பந்தன் குளத்து நீரில் தந்தை முழ்கியபோது பயந்து விட்டான். தந்தையைக் காணவில்லையே என்று அழுதான். அவனுடைய மனதில் தாய் பயிற்றிய நம்பிக்கை தோன்ற தோணிபுரத்துக் கோவிலின் கோபுரத்தைப் பார்த்து அம்மே அப்பா என்று அழைத்து அழுகிறான். அவருடைய நம்பிக்கை வீண் போகவில்லை. இறைவனும் இறைவியும் அவருக்குக் காட்சி கொடுத்தனர். இறைவியின் திருமுலைப்பாலையுண்டு ஞானம் பெற்றுத்தேவாரம் பாடுகிறான்.

குழந்தை நிலையில் ஞானசம்பந்தருக்கு இறைவன் தரிசனம் எளிதாகக் கிடைத்தது. எந்த ஆலயத்தை வழிபடச் சென்றாலும் தனக்குக் கிடைத்த தெய்வீக அநுபவத்தைச் சம்பந்தர் நினைவு கூரத் தவறுவதில்லை. அவர் பாடிய தேவாரங்களில் இறைவனை முழுமையாக உணர்ந்தவராகக் காணப்படுகின்றார். பதினாறு வயதில் முத்தியடைந்த அவருடைய பாடல்களில் இளமையின் குதூகலத்தைவிட பக்தியின் பரவசமே மேலோங்கியுள்ளது. அவர் வளர்ந்த சூழல், இறைவழிபாடுபற்றிய செயற்பாடுகளைச் செய்ய வாய்ப் பளித்தது.

இயற்கையிலே இறைவனைக் காணும் பக்திநிலையை அவர் பாடல்கள் காட்டுகின்றன. பக்திநிலையில் சிலர் இறைவனை எளிதாக உணர்வர். வேறு சிலர் அரிதாகவே உணர்வர். ஐம்பூதங்களாக நிற்கும் இறைவனைச் சம்பந்தர் எமக்கு உணர்த்த முற்படுகிறார். நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்னும் தோற்ற நிலையில் இறைவனைக் கண்டு வழிபடும் மனப்பக்குவம் மனிதருக்கு வேண்டும். நிலைபெற்றிருக்கும் இவற்றைவிட ஒளியாய் நிற்கும் இறைவனையும் காட்டுகிறார். ஒளியை இறைவனின் உருவாகக்கண்டு வழிபடும் மரபு பண்டுதொட்டு நிலவிவருகின்றது. அதைச் சம்பந்தர் மீளவும் நினைவுபடுத்துகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவனுக்கு உருவம் ஒன்று காணாமல் இயற்கையையே இறை உருவாகச் சொற்களால் வரைந்து காட்டிய காரைக் காலம்மையாரின் பக்திநெறி நின்று சம்பந்தரும் சமயப்பணி செய்தவர். சமணம், பௌத்தம் போன்ற பிற சமயங்கள் மக்களிடையே செல்வாக்குச் செலுத்த முற்பட்ட போது சம்பந்தர் அதனைத் தடுக்கப் பணி செய்தார். தமிழ் நாட்டிலே சைவத்தை நிலைநாட்டச் செந்தமிழ்ப் பாசுரங்களை இசையோடு பாடி அனைவரையும் பக்திவசப் படுத்தினார். திருக்கோயில் களை வணங்கும் போது அவர் பாடிய தேவாரம் எல்லோரையும் ஈர்த்தது.

"எரியாயரியாய் நில நீரொடு நீ
வளிகாயமென வெளி மன்னியதூ
ஒளியாயுனையே தொழுதுன்னுமவர்க்கு
அளியாய் கழிப்பாலை யமர்ந்தவனே"

# கொழும்பில் குண்டுப் புரளி

(கொழும்பு)

கொழும்பு மட்டக்குளியில் நேற்று மாலை ஏற்பட்ட குண்டுப்புரளியால் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர்.மட்டக்குளி முகத்து வாரத்தில் வீதியோரத்தில் கிடந்த மர்மப் பொதி ஒன்றையடுத்தே நேற்று மாலை 3.20 மணியளவில் இந்தக் குண்டுப் புரளி ஏற்பட்டது.

குண்டுப்புரளியை அடுத்து சம்பவ இடத்திற்கு படையினர் பெருமளவில் விரைந்தனர்.மர்மப் பொதி இருந்த பகுதிக்கு செல்லும் அனைத்து வீதிகளிலும் போக்குவரத்துக்கள் தடை செய்யப்பட்டன.

இதனால் பேருந்துகளில் சென்ற மக்கள் மிகுந்த அச்சத்துடன் காணப்பட்டனர்.பாடசாலை முடிந்து சென்ற மாணவர்களும் பயத்தால் அங்கும் இங்குமாக ஓடினர்.இதனால் பெரும் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர் மேற்படி மர்மப் பொதியை பிரித்துப் பார்த்தபோது அதற்குள் பிளாஸ்டிக் பொருட்கள் சில காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# மட்டு.தேர்தல் குறித்து...

அரசாங்கம் பெருமைப்பட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

கிழக்கை விடுவித்து விட்டோம் என்று பிரசார வெற்றியில் திளைத்திருக்கும் அரசினதும் இராணுவ ஆயுதக் குழுக்களினதும் கட்டுப்பாட்டில் மக்கள் கைதிகளாய் விடப்பட்டிருப்பதை யாவரும் அறிவார்கள்.

அந்த மக்களிடம் இந்தத் தேர்தல் திணிக்கப்பட்டிருந்தது. நடைபெற்று முடிந்த இத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி முதலான கட்சிகள் போட்டியிடவில்லை. அதற்கான காரணங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தேர்தல் ஆணையகத்திற்கும் மக்களுக்கும் தெரிவித்திருந்தது.

அந்த அம்சங்கள் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளன. இராணுவம் மற்றும் ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தல்களுக்கும் கடத்தல், கொலைகளுக்கும் மத்தியில் அரசின் சர்வ அதிகாரங்களும் இவ் உள்ளூராட்சித் தேர்தலில் பாவிக்கப்பட்டு இத் தேர்தல் அரங்கேற்றப்பட்டுள்ளது.

இத்தனை பலப் பிரயோகத்திற்குள்ளும் கணிசமான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வாக்காளர் அட்டைகள் திரட்டப்பட்டமையும் கற்றை கற்றையாகவே வாக்குகள் காணப்பட்டன என்பதும் கசிந்து வருகின்றது.

வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டு வாக்குச் சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்ற செய்திகளும் வந்துள்ளன.

இச் செயற்பாடுகள் தொடர்ந்தும் எதிர்காலத்தி லும்இந்த அரசு தேர்தல்களை இப்படித்தான் நடத்தப் போகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ஐ.நா. மனித...

திகதி விமர்சனம் செய்திருந்தார்.

உலகில் மக்கள் காணாமல் போதல் தொடர்பாக இலங்கை மிக மோசமான நிலையில் உள்ளதாகவும் அது ஈராக்கையும் தாண்டி விட்டதாகவும் எழுந்தமானமாக மக்கள் காணாமல் போதல் தொடர்பாக ஐ.நாவின் செயற்குழு தெரிவித்துள்ளது.

செயற்குழுவின் இந்த அறிக்கையைத் தொடர்ந்து இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் சபையின் கண்காணிப்பாளர்களை அமைக்க வேண்டும் என்பதனை அவுஸ்திரேலியா ,டென்மார்க், சுவிஸ்லாந்து, சுவீடன் போன்ற நாடுகளும் வலியுறுத்தியுள்ளன.

இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் சபையின் கண்காணிப்பாளர்களை அமைப்பது அவசியமானது என்று தொண்டர் அமைப்புகளும் வலியுறுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

# எதிர்கால...

வழங்கும் எனவும் குழுவின் தலைவர் அலெக்சாண்டர் புளோகஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை நிலவரங்கள் மோசமடைந்திருப்பதைக் கவனத்தில் கொண்டு இந்த வருட இறுதியில் இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் ஏற்றுமதிச் சலுகைகளையும் உதவிகளையும் மீளப் பெற்றுக் கொள்வது குறித்தும் இதற்கு முன்னர் ஐரோப்பிய ஒன்றியத்திற்குச் சிபார்சுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இருப்பினும் தற்போது இலங்கை வந்திருக்கும் குழுவின் அறிக்கையைக் கருத்தில் கொண்டே எதிர்கால உதவிகள் குறித்துத் தீர்மானிக்கப்படும் எனத் தெரியவருகின்றது. (ச-5)

# மசகு...

அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி யூரோவின் பெறுமதிக்கு எதிராக 1.556 டொலராக வீழ்ச்சியடைந்துள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

இரு வார காலத்திற்குள் ஒரு பீப்பா மசகு எண்ணெயின் விலை 101 டொலரிலிருந்து 110 டொலர்க்ளாக அதிகரித்திருக்கின்றது. இதேவேளை உலக சந்தையில் எண்ணெய் விலை பாரியளவு அதிகரித்துள்ள போதிலும் தமிழ்- சிங்களப் புதுவருடத்திற்கு முன்னர் பெற்றோலிய விலைகள் அதிகரிக்கப்பட மாட்டாது என பெற்றோலிய வள அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி அறிவித்துள்ளார்.

புதுவருடத்திற்குப் பின்னரே அதிகரிப்பதா இல்லையா என்பது குறித்துத் தீர்மானிக்கப் படும் எனவும் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார். (ச-5)

# அரசாங்கத்துடன் கூட்டுச்...

சுதந்திரக்கட்சி நியமித்துள்ளது.

எந்தக் கட்சியுடன் கூட்டுச் சேர்வது மற்றும் யாரை வேட்பாளராகத் தெரிவு செய்வது என்பது குறித்து இக்குழு தீர்மானம் எடுக்கும். ஆயுதக் குழுக்கள் எதுவானாலும் தமது ஆயுதங்களைக் கீழே வைத்து ஜனநாயக வழியில் இணைந்து கொள்ள விரும்பினால் அவற்றை அரசாங்கம் வரவேற்குமா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது,

கிழக்குத் தேர்தலின்போது ஆயுதங்களுடன் சில குழுக்கள் வன்முறையில் ஈடுபட்டதாக எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியது. எனினும் கிழக்குத் தேர்தலில் அதிகமான மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பில் ஈடுபட்டதாக அங்கு செயற்பட்ட அனைத்துக் கண்காணிப்புக் குழுக்களும் தெரிவித்துள்ளன.

தேர்தல் தினத்தன்று அப் பகுதியில் எந்த வித வன்முறைச் சம்பவங்களும் பதியப்பட்டிருக்கவில்லை. ஆயுதக் குழுக்கள் செயற்பட்டிருந்தால் வன்முறைகள் நிச்சயம் நிகழ்ந்திருக்கும் என்றார். (ச-5)

# மறுசீரமைக்கப்பட்ட மின் கட்டணம்...

இதன்படி 90 அலகுகளுக்குக் குறைவான மின்பாவனையாளர்களுக்குக் கட்டண அதிகரிப்பு இல்லை. அதற்கு மேலதிகமாகப் பாவிப்பவர்களின் மின்கட்டணத்துடன் 30 வீத எரிபொருள் கட்டணம் சேர்க்கப்படும்.

இதன்மூலம் வறிய மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். எரிபொருள் விலை குறைக்கப்படும்போது அந்தக் கட்டணம் குறைக்கப்படும்.

மின்கட்டணங்களை அதிகரிப்பது குறித்து மக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்கான அறிவித்தல் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி அரசாங்க வர்த்தமானி மூலம் விடுக்கப்பட்டது.

இந்த அறிவித்தலுக்குப் பதிலளித்திருந்தவர்களில் 98 வீதமானோர் கட்டணம் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருந்தனர். திறைசேரியுடனும்பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடனும் மின்சார சபை நடத்திய கலந் துரையாடலின் பின்னரே இந்த மறுசீரமைப்புக் குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மின்சார கட்டணத்தின் மறுசீரமைப்பினால் வருடம் ஒன்றுக்கு 44 பில்லியன் ரூபாவை மேலதிக வருமானமாக சபை பெறவுள்ளது. இந்த வருமானத்தினால் சபையின் வருடாந்தம் துண்டுவிழும் தொகை ஈடு செய்யப்படுகின்றது.

கடந்த 2007 ஆம்ஆண்டில் இலங்கை மின்சார சபைக்கு 138 பில்லியன் ரூபா மொத்தச் செலவு ஏற்பட்டுள்ளது. மின்சார சபைக்குக் கிடைக்கப் பெற்ற மொத்த வருமானம் 97பில்லியன் ரூபாவாகும்.

சென்ற வருடம் மாத்திரம் 44 பில்லியன் ரூபா துண்டுவிழுந்துள்ளது. எமது நாட்டின் மின்சாரம் இரு முறைகளில் உற்பத்தி செய் யப்படுகின்றது. நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தில் 35 வீதமே நீரினால் உற்பத்தி செய்யப்படுகின்றது. எஞ்சிய 65 வீதமும் டீசலைப் பயன்படுத்தியே உற்பத்தி செய்யப்படுகின்றது.

கடந்த வருடம் டீசலைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதற்கு மாத்திரம் 109 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றார். (ச-5)

# வடக்கிற்கு அதிகாரம் வழங்கப்பட்டால்...

கிழக்கு மாகாணத்தை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அங்கு தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அர சாங்கத்துக்கு முடியுமானால் ஏன் இதனைப் போல வடக்கு மாகாணத்திலும் மேற்கொள்ள முடியாது என கண்டியில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கேள்வி எழுப்பினார்.

13-வது திருத்தச் சட்ட மூலத்திற்கு அமைய வடக்கு மாகாண சபைக்கு காணப்படும் அதி காரங்களை வடக்கிற்கு வழங்கினால் அதற்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக அவர் கூறினார்.

இதேவேளை கிழக்கு மாகாண சபைக்கு விரைவில் தேர்தல் ஒன்றை நடத்தப் போவ தாகக் கூறி வரும் நிலையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில் கலந்து கொள்வதா? இல்லையா? என்பது பற்றி ஜே.வி.யின் உயர் மட்டம் எதிர்வரும் வாரங்களில் தீர்மானிக்கவுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள பொது மக்களுக்கான அரச நிறுவனங்கள் அமைக்கப்படுவதிலோ அல்லது பயங்கரவாதத்தை ஒழிப்ப திலோ நாங்கள் எந்தத் தவறையும் காணவில்லை.

எனினும் அண்மையில் கிழக்கில் நடத்தப்பட்ட தேர்தல்கள் அனைத்துக் கட்சிகளின் ஜனநாயகத்தையும் வெளிப்படுத்தத் தவறிவிட்டது என ஜே.வி.பியின் உயர் மட்டக் குழு உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் பல்வேறு ஆயுதக் குழுக்கள் செயற்படுவதால் அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டுவதில் அச்சம்காணப்படு கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள் - 2007

*01. கலை முதற் தேர்வு - 2006*
*02. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - I - 2005&2006*
*03. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - II - 2004&2005*
*04. சிறப்புக் கலைமாணி பகுதி - III - 2004*

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன. இப் பரீட்சைகளுக்குத் தோற்ற விரும்பும் பரீட் சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 11.04.2008. (முடிவுத் திகதிக்குப் பின் கிடைக்கப் பெறும் விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

*பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.*

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்றபெயருக்கு எழுதப்பட்ட ரூபா.100/= க்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா.40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28×20 செ.மீ.அளவுடைய தபால் உறையுடன் *உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

*குறிப்பு:- மீள்பரீட்சார்த்திகள் (கலைமுதற் தேர்வு,கலைமாணி பகுதி-I மற்றும் கலைமாணி பகுதி-II) உரிய பரீட்சைப்பெறு பேறுகள் வெளிவந்த பின்னர் விண்ணப்பிக்கலாம்.*

பரீட்சைக் கட்டண விபரம்:

முதல் முறை பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான கட்டணம் ரூபா.1600/= மீள் பரீட்சார்த்திகளாயின் ஒவ்வொரு பாட அலகிற்கும் செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா.200/=

பதிவாளர்
13.03.2008

(C-855)



## APEX HOSPITAL (PVT) LIMITED

❖ தகுதிபெற்ற வைத்தியர்களின் 24 மணிநேர சேவை - அமைதியான சூழல்
❖ பிரபல வைத்தியர்களின் வைத்திய ஆலோசனைகள்
❖ ஆய்வு கூட சேவைகள். ❖ தங்குமிட வசதிகள்.

### தேவை

❖ மருந்தாளர் - (பார்மஸிஸ்ட் சான்றிதழ்)
❖ M.L.T/D.M.L.T - (ஆய்வு கூடப் பரிசோதகர்) சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும்.
❖ மருத்துவமனை முகாமையாளர்:- (ஆண்/பெண்) வயது:- 25-45 (மும்மொழிகளிலும் தேர்ச்சி, முகாமைத்துவப் பட்டப் படிப்பு)
❖ கணக்காளர் - (ஆண்/பெண்) வயது:- 25-45 (ஆங்கில அறிவு, கணக்கியல்துறைப் பட்டப்படிப்பு, 2 வருட அனுபவம்)
❖ மேற்பார்வையாளர் -(ஆண்) வயது:- 35 ற்கு மேல்- முன்னனுபவம்
❖ எழுதுவினைஞர் -(ஆண்/பெண்) வயது:- 18-28 - G.C.E. (A/L)
❖ தாதிகள் - (பெண்கள்) வயது:-18-28 G.C.E. (O/L),G.C.E. (A/L) (பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்)
❖ உதவியாளர்கள் -(ஆண்/பெண்) வயது:- 18-28 G.C.E. (O/L)
❖ பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் -(ஆண்) வயது:- 20-35 தேகாரோக்கியம் உடையவர்
❖ சுத்திகரிப்பாளர்கள் -(ஆண்/பெண்) வயது:-18-45

விண்ணப்பதாரிகளின் போக்குவரத்து நலன் கருதி விண்ணப்பப் படிவத்தை நாவலர் பதிப்பகம், 112, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

முடிவுத் திகதி :- 15.03.2008

T.P. 077 4452545 (C-846)



## வட்டுக்கோட்டையில் வீடு விற்பனைக்கு

சகல வசதிகளுடன் கூடிய அழகிய வீடு தொலைபேசி வசதியுடன் வட்டுக்கோட்டையில் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
ஸ்ரீராஜ்,
சம்பந்தர் வீதி,
வட்டுக்கோட்டை.
T.P.021 4591358

(C-821)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 14.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.